Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை (14.12.2014) பக்கங்கள் 20 ஓசை - 075

## தெல்லிப்பளை கிழக்கிலும் 15 கிணறுகளில் எண்ணெய் கசிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை கிழக்கு சிற்றியம்புளியடி கிராமத்திலுள்ள 15 கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி ப.நந்தகுமார், நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பகுதியில் உள்ள கிணறுகளில் எண்ணெய்ப் படலம் காணப்படுவதாக அப் பகுதி கிராமசேவகர் மற்றும் பொது மக்கள் தகவல் வழங்கியிருந்தனர்.


அதனை அடுத்து நேற்று சுகாதார பரிசோதகர், சுகாதார தொண்டர்களுடன் சென்று கிணறுகளை பார்வையிட்டுள்ளோம்.

இப்பகுதியில் குடிநீர் வழங்குவதற்காக வலி. வடக்கு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளோம்.

அத்துடன் மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## குடிநீருக்கு பாதுகாப்பற்ற பிரதேசமாக சுன்னாகம் நிலத்தடி நீர் மாசுபட்ட பகுதி

### விரைவில் விசேட அமைச்சரவைப்பத்திரம்



சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ள பகுதியை குடிநீருக்கு பாதுகாப்பற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கு விரைவில் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை தூக்கியெறியும் நிலையில் மக்கள்

### கூட்டமைப்பின் வடமாகாணசபை உறுப்பினர்கள் விசனம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வடமாகாண மக்கள் ஒதுக்குவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்கள் பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை வலி. தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அந்த இரகசிய கலந்துரையாடலின் போது, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

அதே சமயம், வடமாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில், வடமாகாண சபையின் செயற்பாடுகள் மக்களுக்கு திருப்பதியளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

அந்த வகையில், வடமாகாண அமைச்சர்கள் 4 பேரினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் மக்கள் மத்தியில் சென்றடையவில்லை. அதனால், மக்கள் தமிழ்த்தேசியக கூட்டமைப்பின் செயற்பாடுகளில் திருப்பதி அடையவில்லை என்ப

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணிசுவீகரிப்பிற்கான தீர்வை அரசியல் வழிமுறை மூலமே பெறலாம்

### கொழும்பு சட்டக்கல்லூரி பீடாதிபதி செல்வக்குமார் தெரிவிப்பு

காணி சுவீகரிப்பிற்கு அரசியல் ஊடாக தீர்வினை நாட வேண்டுமே தவிர மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக தீர்வினைப் பெற முடியாதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், கொழும்பு சட்டக் கல்லூரி பீடாதிபதியுமான என். செல்வகுமார் நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தலைமையில் யாழ். மாவட்ட சிவில் சமூக உறுப்பினர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு யாழ். கிறீன் கிறஸ்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அறிவுரை வழங்க ஜப்பானியரும் நியமனம்

காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிவுரை வழங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மேலும் ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை கடந்த ஜூலை மாதமளவில் காணாமற் போனோர தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் ஆணைக்குழுவுக்கு அறிவுரை வழங்க ஐவர் அடங்கிய நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமித்தார்.

இதன் தலைவராக ரீமன் டெஸ்மன் டி சில்வா செயற்படுவதுடன் ரீமன் ஜெப்ரி நீஸ், பேராசிரியர் டேவிட் குரோன், அபுதாஸ் கௌசல் மற்றும் அஹமல் பிலால் யூசி என்போரும் அடங்குகின்றனர்.

இதன்படி புதிதாக சேர்க்கப்பட்டவருடன் அறுவர் தற்போது, காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அறிவுரை வழங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களை தன்பக்கம் இழுக்கும் சக்தி சந்திரிக்காவிடம் தற்போதும் உள்ளதா?

### பொறுத்திருக்க வேண்டும் என்கிறார் தனபால

(கொழும்பு)

ஒன்பது வருடங்களுக்குப் பின்னரும் மக்களை தன்பக்கம் திருப்பக்கூடிய சக்தி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு உள்ளதா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டுமென முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தனபால தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

35 வருட காலத்திற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் வெளிப்படுத்தவேண்டும் வேட்பாளர்


### வலியுறுத்துகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலை உறுதியாக வெளிப்படுத்த வேண்டுமென மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

லண்டனைத் தளமாக கொண்ட சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இலங்கையில் பல பத்தாண்டுகளாகத் தொடரும் பரவலான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவர, அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் உறுதிபூண வேண்டும்.

இத்தகைய மீறல்களுக்கு வசதி செய்யும், தண்டனையில் இருந்து விலக்களிக்கப்படும் நிலையை முடிவுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க



# விசேட கலந்துரையாடல்

வடமாகாண சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நாளை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாண சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு நிதியமைச்சரினால் அழைக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள், மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து கலந்தாலோசனை மேற்கொள்ளவே இந்த விசேட கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சரின் அலுவலகத்தில் இது நாளை இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)


**டயானா பிளாஸ்ரிக்**

**றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.


இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088. (C/3589)


# நிலையான தலைமையின் மூலமே நீடித்த அரசியல் உரிமை கிட்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நிலையான அரசியல் தலைமையின் ஊடாகவே எமது மக்களுக்கான வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் மட்டுமன்றி நீடித்த அரசியல் உரிமையையும் வென்றெடுக்க முடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், பாஷையூர் மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நேற்றைய தினம் அப்பகுதிக்கு சென்ற அமைச்சர் மக்களுடன் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கு உங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நியாயமானவை என்பதுடன் தீர்வு காணப்பட வேண்டியவையுமாகும். அந்தவகையில் உடனடியாக தீர்வு காணப்படக்கூடிய பிரச்சினைகள் முன்னுரிமையடிப்படையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்பகுதி மக்கள் தமது சொந்த உழைப்பில் உயர்ந்தவர்கள என்பதை நான் நன்கறிவேன். இருந்த போதிலும் கடந்தகால தவறான வழிநடத்தல்களினால் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலையில், இன்றுள்ள அமைதிச்சூழலில் மீண்டும் தமது பழைய நிலைக்கு திரும்பி வருகின்றனர் என்பதுடன், பல்வேறுபட்ட தேவைப்பாடுகள் இருக்கின்ற போதிலும் அவற்றையும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு மக்களும் உணர்ந்து கொண்டு நிலையான அரசியல் தலைமையை தெரிவு செய்யும் வகையில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவரும் வரக்கூடியவருமான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு நிலையான அரசியல தலைமையின் ஊடாகவே எமது மக்களுக்கான வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியுமென்பது மட்டுமல்லாமல் நீடித்த அரசியல் உரிமையையும் வென்றெடுக்க முடியுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணசபையை கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒருவருடம் கடந்துள்ள நிலையிலும் எவ்வித மான மக்கள் நலன்சார்ந்த திடடங்களையும் முன்னெடுக்க முடியவில்லை.

ஆனால், வடக்கு மாகாண சபையை நாம் கைப்பற்றியிருந்திருப்போமேயானால் யாழ்.மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணத்தை அபிவிருத்தியால் வளமான தேசமாக கட்டியெழுப்பியிருக்க முடியும்.

அதுமட்டுமன்றி எமது மக்களுக்கு வளமான ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே நாம் அரசில் அங்கம் வகிக்கும் அதேவேளை, அரசுடனான நல்லுறவு மற்றும் இணக்க அரசியல் ஊடாக பல்வேறுபட்ட மக்கள் நலன்சார்ந்த அபிவிருத்திகளையும் முன்னெடுத்து வருகின்றோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, மக்கள் வரவிருக்கும் காலங்களில் சரியானவர்களை இனம்கண்டு அவர்களுக்கு தமது ஆதரவை வழங்கும் பட்சத்திலேயே மேலும் பாரிய முன்னேற்றத்தை காண முடியும்.

அந்தவகையில் மக்கள் சரியான நிலைப்பாட்டினை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ப துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவுக்கு வாக்களித்து அவர்களது வெற்றியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது மக்களது தேவைப்பாடுகள் பிரச்சினைகள் கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

பாசையூர் அந்தோனியார் கல்யாண மண்டபத்தில் சட்டத்தரணி றெமிடியஸ் தலைமையில் நடைபெற்ற இம் மக்கள் சந்திப்பில் சட்டத்தரணி செலஸ்ரின், ஈ.பி.டி.பியின் யாழ்.நகர இணைப்பாளர் றீகன், மரியதாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# நல்லூர் பிரதேச சபையின் குப்பைகளை கொட்டக்கூடாது

## எச்சரிக்கை விடுத்தனர் மூவர்

(திருநெல்வேலி)

குப்பைகளைக் கொட்டுவதற்காக அரியாலை கிழக்குப் பகுதிக்கு சென்ற நல்லூர் பிரதேச சபையின் உழவு இயந்திரத்தின் சாரதியும் உதவியாளரும் குறிப்பிட்ட காணியில் குப்பைகளைக் கொட்டக் கூடாது என மூவரினால் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அரியாலையில் உள்ள பிரதேச சபையின் காணியில் குப்பைகள் கொட்டுவதற்காக மேற்படி உழவு இயந்திரம் சென்றுள்ளது. அப்போது அப்பகுதிக்கு முச்சக்கரவண்டியில் வந்த மூன்று பேர் அங்கு குப்பைகளைக் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உழவு இயந்திரத்தின் சில்லின் காற்றையும் கழற்றிவிட்டுள்ளனர்.

இவற்றைத் தவிசாளரிடம் தொலைபேசியில் கதைத்த அந்த மூவரும் இந்த இடத்தில் இனிமேல் குப்பைகள் கொட்டக்கூடாது என எச்சரித்துள்ளனர். அது பிரதேச சபைக்கு சொந்தமான காணி எனவும் அங்கேயே குப்பைகள் கொப்பட்டுவதாகவும் தவிசாளர் அவர்களிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

இதுபற்றி உழவு இயந்திர சாரதி மற்றும் உதவியாளருடன் சென்ற நல்லூர பிரதேச சபைத் தவிசாளர் யாழ்ப்பாணம், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (137)

## வதிரி முன்பள்ளியின் பரிசளிப்பு விழா

(கரணவாய்)

வடமராட்சி வதிரி முன்பள்ளி பரிசளிப்பு விழாவும் பிரிவுபசார விழாவும் இன்று இடம்பெறவுள்ளது.

முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி மெதடிஸ்த மிசனறி தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் விழாத் தலைவ்ர் க.முகுந்தராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு இதில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுடன் க.கனகதுரை ஆரம்ப பிள்ளைப் பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தில்லைநாதன், அதிபர் த.தேவராசா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இதன்போது கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (18)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 316

திகதி - 2014.12.12

வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள்: 09 23 43 44 — ஆங்கில எழுத்து: M

பரிசுத் தொகை ரூபா. 19,236,860/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 204 | 204,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 353 | 353,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9081 | 544,860/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4805 | 192,200/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 118904 | 2,378,080/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17359 | 347,180/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 19,236,860/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,369,320/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 19,469,580/-

2014.12.16ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3918)

# அராலி - வேலணை கடற்பாதையை புனரமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

## யாழ்.கூட்டுறவு சம்மேளனங்களின் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவகத்தினையும் - வலிகாமத்தையும் இணைக்கும் அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பு குறித்து கடந்த 5 வருடங்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

2015 ஆம் ஆண்டிலாவது இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக புனரமைத்து தருவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்களின் தலைவர் ச.செல்வரத்தினம் கேட்டுள்ளார். அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பு குறித்து தலைவர் ச.செல்வரத்தினம் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி வீதி புனரமைப்பு குறித்து கடந்த 5 வருடகாலமாக நாம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் இதுவரை எமது கோரிக்கை நிறைவேறவில்லை.

ஜப்பான் அரசு மேற்படி திட்டத்தை பார்வையிட்டு மதிப்பீடு தயாரித்துள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர், கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தெளிவாக விளக்கியிருந்தார்.

எனவே 2015 இல் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் அராலி - வேலணை கடற்பாதையை புனரமைத்து தருமாறு அமைச்சரிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளார் சம்மேளனம் தலைவர்.

செயலாளர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி, தவிசாளர் சி.சிவராசா மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் மற்றும் த.நடனேந்திரன் ஆகியோரும் கடந்த காலங்களில் இது விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வந்தமை தெரிந்ததே. (92)

# பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாக கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.

சகல நிர்வாகிகளையும் இல.23, சிவன் பண்ணை வீதியில் உள்ள அலுவலகத்திற்கு வருகை தருமாறு வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி இளையதம்பி சற்குருநாதன் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் வடமாகாண ஊடகவியலாளர் எதிர்நோக்கும் பிரச்சினை, அவர்களுக்கான உபகரணம் வழங்கல் தொடர்பாக முக்கிய தீர்மானம் எடுக்கப்பட விருப்பதால் சகலரையும் தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கத்தின் தலைவர் செல்லப்பா கதிர்காமதம்பி தெரிவிக்கையில், தனது உடற் சுகயீனம் காரணமாக உடன் சமுகமளிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் அங்கத்தவர்கள் யாவரும் கூட்டத்திற்கு சமுகமளித்து சங்கத்தினை வலுவூட்டி செயற்படுத்துமாறும் கேட்டுள்ளார். (92)

# ஆறுகால்மடம் தில்லை வயல் வீதி கல்லிடப்பட்டு புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பழம் றோட் 4 ஆம் ஒழுங்கை தில்லைவயல் வீதி கல்லிடப்பட்டு புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்மாநகரசபை முன்னாள் துணை முதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த வீதி திருத்தப்பணிகளுக்கு சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் நேற்று முதல் இந்த வீதி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரிவித்தார்.

சேறும் சகதியுமாக காணப்பட்ட இவ் வீதியினூடாக அப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதனை அடுத்து இந்த வீதிக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# பொய்ச்சங்கை ஊதினாலும் ஊரில நாலு நல்ல காரியங்கள் நடக்கிறதை விரும்பினால் சரிதான்...




நீண்ட இழுபறிகளுக்குப் பிறகு, இரணைமடுக்குளத்தைப் புனரமைக்கிறதுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதித்திருக்கிறது.

இது மகிழ்ச்சியளிக்கிற ஒரு சங்கதியே.

ஆனால், இதுவரைகாலமும் தேவையில்லாத ஒரு இழுபறிக்கு ஏன் ஆசிய அபிவிருத்தி வங்கி இடமளித்தது?

இப்பொழுது எந்த அடிப்படையில் இணக்கத்துக்கு அது வந்தது?

அப்பொழுதும் இப்பொழுதும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா தான் அரசாங்கத்தரப்பின் சார்பில் உடன்பாடு காண்பதற்கு ஒத்துழைத்திருக்கிறார்.

இந்த உடன்பாட்டின் பின்னணியில் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் முயற்சிகளும் இருக்கிறதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர் குத்தினாலும் அரிசியானால் சரிதான்.

ஆனால், தான் குத்தித்தான் அரிசியாகி இருக்கிறமாதிரி, இந்த இரணைமடுப் புனரமைப்புத் திட்டத்தைப் பற்றி சங்கூதிக் கொண்டு திரியிறார் பொய் ஐங்கரநேசன்.

இதைப்பற்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலை ஒன்று முதலமைச்சரிடம் கேட்டிருக்கிறார்.

அதுக்கு முதலமைச்சர் சொன்னாராம், 'ஐங்கரநேசனைப் பற்றித் தெரிஞ்சுதானே ஊர் உலகமெல்லாம் பொய் ஐங்கரநேசன் எண்டு சொல்லுது. அவர் அப்பிடித்தான் செய்வார். அவர் மட்டுமென்ன, எங்கட ஆட்கள் (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள்) எல்லாரும் இப்பிடித்தான். கூசாமல் பொய் பேசுவாங்கள். எல்லா வெற்றிக்கும் தாங்கள்தான் பொறுப்பு என்று சொல்லுவாங்கள். ஏதோ இருக்குமட்டும் சமாளித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்' என்று.

எப்படியோ விரைவில் இரணைமடுக்குளம் புனரமைக்கப்படப் போகிறது.

இதனால் விவ்சாயிகள் மட்டுமல்ல. கிளிநொச்சிப் பகுதிகளில் இருக்கிற எல்லோருக்கும்தான் நன்மைகள் கிட்டும்.

குளப்புனரமைப்பு நடக்காமல் இருந்திருந்தால், மழை பெய்யப் பெய்ய நெஞ்சிலே கையை வைத்துக்கொண்டு, கடவுளை நேர்ந்து கொண்டுதான் பெரும்பாலான சனங்கள் இருந்தனர்.

காரணம், வெள்ளம் கூடி, தண்ணீர் மட்டம் உயர்ந்தால், எந்த நேரத்திலும் அணைக்கட்டு கைவிடலாம் என்ற பயம் இருந்தது.

இப்பொழுது அந்தப் பயம் நீங்கியுள்ளது.

அதோடு நீர் மட்டத்தை உயர்த்தி, மேலதிக நீரைச் சேமித்துக் காண்பித்து விட்டு அதன் பிறகு யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் விநியோகத்தைப் பற்றிப் பேசலாம் என்று கருதுகிறது ஆசிய அபிவிருத்தி வங்கி.

இதைத்தான் நாசூக்காக முதலமைச்சரும் சொல்லியிருக்கிறார்.

அதனால்தான் தினேஸ் குணவர்த்தனாவும் ஒப்புதலை அளித்திருக்கிறார்.

இதெல்லாம் பிறகுதான்.

இப்பொழுது குளம் புனரமைக்கப்படட்டும்.

வடக்கின் முக்கியமான நீர்த்தேக்கம் அது.

மிகப்பெரிய அணைக்கட்டு.

இதைக் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்புமாகும். அப்பிடியே விவசாயிகளை ஆறுதல் படுத்தி, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள குளத்தைப் பாதுகாக்க வேண்டியதும் அனைவருக்குமான கடமையாகும்.

இப்பொழுது இந்தக் கடமையை ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் செய்து முடித்திருக்கிறார்கள்.

ஆனால், இதை ஐங்கரநேசன் போன்றவர்கள் தங்கள் தலையில் தூக்கி வைத்து நாசமாக்கப் போகிறார்களோ என்றுதான் அச்சமாக இருக்கிறது.

முதலமைச்சருக்கு இந்தத் திட்டம் கைவிடப்படாது, எப்படியாவது நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விருப்பம் இருந்தது.

இதைப்போல இந்தக் குளத்திட்டம் எப்படியாவது நடக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரும் எவ்வளவோ பாடுபட்டனர்.

எல்லோருடைய முயற்சிக்கும் கைமேல் பலன் கிட்டியிருக்கிறது.

இதன்படி அடுத்த ஆண்டு இரணைமடுக்குளத்தை அண்மித்த பகுதிகள் புத்தெழில் பூத்துப் பொலிந்திருக்கும்.

இரணைமடு பெரிய சமுத்திரமாக அலைமோதும்.

இப்படி நாலு நல்ல காரியங்கள் நடந்தால் தமிழ்ச் சமூகம் நல்ல வளர்ச்சியைப் பெற்றுவிடும்.

காலம் பிந்தினாலும் ஞானம் பிறந்திருக்கு ஞானத்தங்கமே.... எந்தன் தங்கமே....

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சறுக்க மாட்டார் மாவை!

நேற்று இந்தப் பகுதியில், மாவை சேனாதிராஜா அவர்கள் இரண்டரை மாதங்களுக்குமுன் உறுதிபட அறிவித்த அகிம்சைப் போராட்ட திகதியை ஒத்திப்போடுவதாக இருந்தால், எந்த நம்பிக்கையின் அடிப்படையில் எந்தத் திகதி வரை போராட்டத்தை ஒத்திப்போடுகிறார் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று எழுதியிருந்தோம் அல்லவா?

ஆச்சரியகரமாக பலபேரிடமிருந்தும் தொலைபேசி அழைப்புகள் வந்தன. மாவை அவர்கள் தமிழரசுக் கட்சியிலுள்ள மற்றவர்களைப் போன்றவர் அல்ல என்றே எல்லோரும் ஒத்தபடி கருத்துத் தெரிவித்தார்கள்.

அதாவது, தலைவர் சம்பந்தன் மற்றும் திடீர் அரசியல்வாதிகளான விக்னேஸ்வரன், சுமந்திரன் போன்றோரைப் போல எந்த வித போராட்டங்கள் கஷ்டங்கள் தியாகங்கள் இல்லாத சொகுசு அரசியலுக்குள்ளால் வந்தவரல்ல மாவை அவர்கள்.

அவர் இளைஞர் போராட்டங்களூடாக அரசியலுக்கு வந்தவர். சிறைக்குப் போய் முகம்முழுக்கத் தாடியோடு வெளியே வந்தவர். அந்தக் கோலத்தில் பத்திரிகைகளில் வெளிவந்த படத்தைப் பார்த்து யாருமே தன்னை அடையாளங் காணக்கூட இல்லை என்று சமீபத்தில் புத்தக வெளியீட்டு விழா ஒன்றில்கூட அவர் பேசியிருந்தார்.

தீர்மானகரமாக அறிவித்த போராட்டத்தை சப்பைக் காரணங்களுக்காக ஒத்திவைத்துவிடக் கூடியவரல்ல மாவை என்றே பலரும் அழுத்திச் சொன்னார்கள். இலங்கையில் தேர்தல்கள் வருவதும், ஆட்சிகள் மாறுவதும், ஜெனீவா மகாநாடுகளும் பல காலமாக நடந்து வருகின்றன.

இருந்தபோதிலும் நமது மக்களுக்கான தீர்வு குறித்து நம்பிக்கையுள்ள நகர்வோ அதற்கான அறிகுறிகளோ காண்பிக்கப்படாததை அடுத்தே, அகிம்சைப் போராட்டத்தை திட்டவட்டமான தீர்மானமாக எடுத்து அறிவித்தார் மாவை.

அதுவும், 'நாளையே அகிம்சைப்போர்' என சட்டென எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஆரம்பித்துவிடவில்லை. அரசுக்குப் போதுமான அளவு காலக்கெடுவினைக் கொடுத்து, சரியாக மூன்று மாதங்களின் பின் அதாவது ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சாத்வீகப் போராட்டம் நடக்கும் என்ற அவரது உறுதியான அறிவிப்பைச் செய்தார்.

தமிழர்க்கான இறைமையுள்ள அரசு கிட்டும் வரை தொடர்ச்சியாக சாத்வீகப் போராட்டங்கள் தமிழர் பகுதிகளெங்கும் நடைபெறும் என்றும், அதன்மூலம் 2015–ல் தீர்வைக் காண்பது தமிழரசுக் கட்சியின் இலக்கு அதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்றும் அவர் அறிவித்ததை வெறுமனே மக்களை உசுப்பேத்தல் என்று பார்க்க முடியவில்லை.

காந்தியாரின் அகிம்சைப் போராட்ட காலத்தில் நம்மில் பலர் இருநதிருக்க முடியாது. ஆனால், அண்மையில் ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான சந்திரசேகர ரெட்டி அவர்களின் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பலன் கிடைத்ததை எல்லோருமே பார்த்தோம்.

தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் அவர் இறந்துவிடுவாரோ என்ற நாள் நெருங்க நெருங்க தெலுங்கானா மாணவர்கள் வீதிக்கு இறங்கினார்கள்; அரச அலுவலகங்கள் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன; ஆதரவாகப் பெருந்திரளான தெலுங்கானா மக்கள் சாத்வீகப் போரில் இணைந்தார்கள்...

விளைவு – அரசு இறங்கி வந்தது. ஆந்திராவை தெலுங்கானா என்றும் ராயல்சீமா என்றும் இரு மாநிலங்களாகப் பிரித்தது. தெலுங்கானாவுக்கு சந்திரசேகர ரெட்டி முதல்வரானார். இது நாம் கண்முன்னே கண்ட அகிம்சைப் போராட்டத்தின் வெற்றி.

அப்படி தொடர்ச்சியான சாத்வீகப் போரை உறுதிபட முன்னெடுக்கக் கூடியவர்தான் மாவையும். மைத்திரி பேச்சை நம்பியோ அமெரிக்கப் பிரேரணையை நம்பியோ தான் தீர்மானகரமாக அறிவித்த போராட்டத்திலிருந்து பின்வாங்கிவிட மாட்டார் என்றே கிராமம் கிராமமாகப் பலரும் கருதுகிறார்கள். - ஆசிரியர்

# பாப்பரசரை வரவேற்பது யார்? மகிந்தவா? மைத்திரியா?

## சர்ச்சை கிளப்புகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

(கொழும்பு)

பாப்பரசர் கொழும்பு வரும் போது அவரை வரவேற்கப்போவது யார்? என்ற சார்ச்சையை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கிளப்பியுள்ளார்.

பாப்பரசர் வரும் போது அவரை ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதானமாகக் கொண்ட கூட்டணியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே வரவேற்பார். இது உறுதி. என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. சுஜீவ சேனசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார். இந்நாட்டில் சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்டுவதற்கும் ஜனநாயகத்தை நிலைப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் என நாட்டு மக்கள் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமது வாக்குகளைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகவும் அவர் கூறினார். நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சுஜீவ சேனசிங்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசில் இருப்போர் தற்போது எதிர்க்கட்சியின் பக்கம் வந்து கொண்டிருக்கின்றனர். இப்போது எதிர்க்கட்சியின் பலம் அதிகரித்து வருகின்றது. அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நல்லதொரு தீர்மானத்திற்கு வருவார் என்று நாம் நம்புகின்றோம். ஏனெனில் அவர் நேர்மையானவரும் அதேநேரம் தமது கடமையைச் சரிவரச் செய்பவருமாக இருக்கிறார். அத்துடன் அவர் முதுகெலும்புள்ளவ்ராக செயற்பட வேண்டும் என்பதனையே விரும்புகின்றோம். ஜனவரி 8ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் நாமே வெற்றி பெறுவோம். அதன் பின்னர் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராவது உறுதியாகும். பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் நிச்சயமாக இலங்கைக்கு வருகை தருவார். அவர் நிச்சயமாக இலங்கை வருகை தருவார் என்பதற்கும் காரணம் உள்ளது. அதாவது பரிசுத்த பாப்பரசரின் பைலும் ஜனாதிபதி மஹிந்தவிடம் இருக்கின்றது. ஆகையினால் அவர் நிச்சயம் வருவார். பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகை தரும்போது ஜனவரி 9ஆம் திகதி வெற்றி வாகை சூடியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதானமாகக்கொண்ட கூட்டணியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அவரை வரவேற்கப்போகிறார்" - என்றார்.

# வீடு திருத்த மானிய உதவி; 'திவிநெகும' பயனாளிகளுக்கு

## மட்டக்களப்பில் ஆரம்பம்

வாழ்வாதார திட்டத்தின் கீழ் திவிநெகும உதவிபெறும் மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த வறிய குடும்பங்களுக்கு வீடுகளை திருத்துவதற்கான வீட்டு மானிய உதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு காங்கேயனோடை அல்-அக்ஷா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வாழ்வின் எழுச்சி 'திவிநெகும' திணைக்களத்தின ஆரையம்பதி பிரதேச 'திவிநெகும' பொறுப்பாளர் ஆர்.இராசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவ்ரும்,பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ. எம்ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்படி திவிநெகும பயனாளிகள் 600 பேருக்கு வீட்டு மானிய உதவித் தொகை 2500 ரூபா வீதம் வழங்கி வைத்தார்.

பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் இணைப்புச் செயலாளர் முஹம்மட் றுஸ்வின், வாழ்வின் எழுச்சி 'திவிநெகும' திணைக்களத்தின் ஆரையம்பதி பிரதேச 'திவிநெகும' உத்தியோகத்தர்கள் உட்பட திவிநெகும பயனாளிகளும் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

# அழகுசாதனப்பொருள் விற்பனை நிலையங்கள் முற்றுகையிட்டு சோதனை ஆரம்பம்

## போலிகளை அப்புறப்படுத்த ஏற்பாடு

(கொழும்பு)

நாடுமுழுவதும் உள்ள அழகு சாதனப் பொருட்கள்விற்பனை செய்யும் நிலையங்களை முற்றுகையிட்டு சோதனை செய்யும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பத்திரிமின்றி சட்டவிரோதமான முறையில் இயங்கும் அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்கள் தொடர்பாக நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருகின்றன. இதனால் அரசாங்கம் அழகு சாதனப் பொருட்களின் விற்பனை நிலையங்கள் தொடர்பாக திடீர் சோதனைகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபை,மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையுடன் இணைந்து இந்த திடீர் சோதனைகளை நடத்தவுள்ளது.

அனுமதிப்பத்திரமின்றி இயங்கும் அழகு சாதன பொருட்களின் விற்பனை நிலையங்கள் மட்டுமன்றி, தரமற்ற அழகு சாதன பொருட்களை விற்பனை செயயும் நிலையங்களின் அனுமதி பத்திரங்களை ரத்துச் செய்யவும் நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

# கடன் அட்டை மோசடியில் கில்லாடிகள்; நான்கு இலங்கையர் உட்பட ஐவர் கைது

கிரடிட் காட் மோசடி தொடர்பில் இலங்கையர்கள் நால்வர் உள்ளிட்ட ஐவர் தமிழகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வங்கி ஒன்றினால் சென்னை பொலிஸ் கமிஷனர் அலுவலத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் சிலர் வெளிநாட்டினர்களின் ஏ.ரி.எம், கிரெடிட் கார்டுகளின் இரகசிய எண்களைத் திருடி, போலி கார்டுகளை தயார் செய்து தங்கள் வங்கி மூலம் பணம் எடுத்துள்ளனர் என்றும் வணிக நிறுவனங்களில் பொருட்களையும் வாங்கி பல இலட்ச ரூபாய்களை மோசடி செய்துள்ளனர். எனவே, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இதன்படி, மத்திய குற்றப்பிரிவு வங்கி மோசடி தடுப்பு பிரிவு பொலிசார் வழக்குப் பதிவு செய்து விசாரணையில் இறங்கினர்.

அதில், மடிப்பாக்கத்தில் வசித்து வரும் இலங்கை தமிழர்களான ஆனந்தன் என்ற ரூபன் (வயது-45), திஷோக் குமார் (வயது-28), தினேஷ் குமார் (வயது-27), கிருஷ்ணதாஸ் என்ற முருகன் (வயது-52) மற்றும் நாகூரைச் சேர்ந்த தஸ்லின் (வயது-24) ஆகியோர் இதுபோன்ற மோசடி வேலைகளில் ஈடுபட்டது தெரியவந்தது.

அவர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தமிழக ஊடகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இவர்களிடம் இருந்து 100க்கும் மேற்பட்ட போலி கிரெடிட் கார்டுகள், கார்டு தயாரிக்க பயன்படுத்திய கருவிகள், சொகுசு கார், மடிக்கணனிகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.


கைது செய்யப்பட்ட ஐவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர் ஏன்று தெரியவருகிறது.

# தமிழ்தேசிய கூட்டமைப்பினர் காத்துவரும் கள்ளமௌனம் மக்களின் கருத்து அறியும் சுதந்திரத்துக்கு எதிரானது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஒருபோதும் சந்திக்காத இடியப்ப சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டிருக்கின்றனர். மறுபுறம் ஏற்ச்சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்பதுபோல் சிஹல உறுமைய போன்றவை சார்பில் கிடைக்கக் கூடிய சிங்கள இனவாத வாக்குகளையும் இழந்து விடாமல் தமிழ் மக்களின் வாக்குகளையும் அபகரிக்கும் முயற்சியில் படாத பாடு படுகின்றார் மைத்திரி.

கூட்டமைப்பை சேர்த்துக்கொண்டால் சிஹல உறுமையவுக்கு கோபம். அதனால் தமிழ் மக்களுக்கு எந்த வாக்குறுதியும் தரமுடியாது வெளியே இருந்து ஆதரியுங்கள் என்றால் கூட்டமைப்புக்கு கோபம். தமிழ் மக்களிடம் எதனைச்சொல்லி வாக்குகேட்பது என்கிற திண்டாட்டத்தில் கூட்டமைப்பு படாதபாடுபடுகின்றது.

> மைத்திரி சொல்வதுபோல அவரே வென்றாலும் அடுத்து ரணிலே பிரதமராக வரப்போகின்றார். எனவே சந்திரிகா என்பது இந்த தேர்தலை பொறுத்தவரையில் அமெரிக்க ஐரோப்பிய மேலாதிக்கங்களின் ஒரு இலங்கைக்கான புரோக்கர் மட்டுமே. எனவே புரோக்கரிடம் அல்ல ரணிலிடமே தமிழ் மக்கள் தொடர்பான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த ரணில்தானே சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது முன்வைத்த தீர்வுப்பொதியை ஒருகாலத்தில் பாராளுமன்றத்தில் வைத்து எரித்த விண்ணாதி விண்ணன் ஆவார்...



**எழுகதிரோன் கட்டுரையிலிருந்து**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முடிவு என்ன என்று தெரியாமல் அதன் முக்கிய தலைவர்களே ஆளுக்கொரு முணுமுணுப்புடன் நாட்களை கடத்தி வருகின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் பிரச்சினைகள் என்றவாறு காலமெல்லாம் பிச்சைக்காரன் புண்ணைச் சொறிவது போல அதையே சொறிந்து சொறிந்து தம் பிழைப்பை ஓட்டிவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த ஜனாதிபதி தேர்தலில் அது பற்றிப் பேசாமல் கள்ளமௌனம் காக்கவேண்டிய அதிசயம் நிகழ்ந்திருக்கிறது...

தாம் காலமெல்லாம் பேசும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய ஒரு விரிவான உரையாடலை நடத்தாமல் எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரிக்குமாறு மக்களை கோரமுடியாது திண்டாடுகின்றனர் கூட்டமைப்பினர்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு குறித்து ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள அரச சார்பு வேட்பாளரும் சரி எதிரணியின் பொது வேட்பாளரும் சரி ஆக்கபூர்வமான எந்த ஒரு வாக்குறுதியையும் இதுவரை வழங்க முன்வராமையே அதற்கு காரணமாகும்..

ஆனால் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய பேச்சுக்களை நடத்தியிருப்பதாகவும் எனினும் இதில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் புரிந்துணர்வு பற்றி பகிரங்கப் படுத்தாமல் இரகசியம் காக்குமாறு சந்திரிகா குமாரதுங்கவினால் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் ஆளுங்கட்சி தெரிவித்துள்ளது. தென்பகுதி வாக்காளர்களை ஏமாற்றுவதற்காகவே எதிரணியினால் இந்த இரகசியம் பேணப்படுவதாகவும் ஆளுந்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த் செய்தி உண்மையாகவே இருந்தாலும் சிஹல உறுமயவுக்கு் தலையைய்ம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாலையும் காட்டும் மைத்திரியை நம்பி தமிழ் மக்கள் எப்படி வாக்களிக்க முடியும்? என்கின்ற கேள்வி எழுகின்றது.

மைத்திரி சொல்வதுபோல அவரே வென்றாலும் அடுத்து ரணிலே பிரதமராக வரப்போகின்றார். எனவே சந்திரிகா என்பது இந்த தேர்தலை பொறுத்தவரையில் அமெரிக்க ஐரோப்பிய மேலாதிக்கங்களின் ஒரு இலங்கைக்கான புரோக்கர் மட்டுமே. சந்திரிகா முதலாவதாக இந்த நாட்டில் வாழ்பவரல்ல. அவரது பரம்பரை இலண்டனில் வாழ்ந்துவருகின்றது. தேர்தல் முடிந்ததும் அவர் லண்டனை நோக்கி பெட்டியை கட்டிவிடக்கூடும்.

எனவே புரோக்கரிடம் அல்ல ரணிலிடமே தமிழ் மக்கள் தொடர்பான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த ரணில்தானே சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தபோது முன்வைத்த தீர்வுப்பொதியை ஒருகாலத்தில் பாராளுமன்றத்தில் வைத்து எரித்த விண்ணாதி விண்ணன் ஆவார்...

இவர்களின் இந்த இடியப்ப சிக்கலுக்குள் வால் எங்கே? தலை எங்கே? என்று கூட்டமைப்பு கண்டு பிடிப்பதற்குள் தேர்தல் முடிந்துவிடும்.

அதற்கிடையில் -

தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டு இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ள படையினர், அவற்றில் இருந்து வெளியேறி அந்த மக்கள் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு வழியேற்படுத்த வேண்டும்.

காணமற்போனவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச் சாலை களில் விசாரணைகளின்றி பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் போன்றவர்களின் விடுதலை...

போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் இந்த முக்கிய வேட்பாளர்களின் கருத்து அரசியல் நிலைப்பாடு என்பவற்றை அறிந்த பின்பே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இறுதி முடிவு ஒன்றை எடுக்கும் என்றும் கூட்டமைப்பின் பேச்சாளரும் தமிழரசுக்கட்சி எம்பியுமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒரு போடு போட்டிருக்கின்றார்.

"ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குகின்றது என்ற அறிவிப்பினை தற்போது வெளியிட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்" என்று தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சொல்லியிருக்கின்ற மொக்கு கதைகளைப்போல் அன்றி சுரேசின் அறிக்கை சற்று அரசியல் தன்மை கொண்டிருக்கின்றது.

சுரேஷ் சொல்வது போன்று அப்படியொரு முடிவு காணப்பட்டால் அதனை பகிரங்கமாக மக்கள் முன் வைக்க வேண்டும். அது ஒருதலைப்பட்சமாக அன்றி எதிரணி வேட்பாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஒருமித்து வெளியிடும் கூட்டறிக்கையாக இருக்க வேண்டும். அதுவே மக்களின் கருத்தறியும் உரிமைக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் மதிப்பளிப்பதாகவும் அமையும்.

ஆனால் எதிரணி வேட்பாளர் இத்தகைய வாக்குறுதிகள் எதையும் வழங்கப் போவதில்லை என்பதை அவரது அண்மைய பேச்சு ஒன்று நன்கு புலப்படுத்துகின்றது. மைத்திரிபால தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பாக இதுவரை எவ்விதமான கருத்துக்களையும் முன்வைக்காததுடன் இனப்பிரச்சினை தொடர்பாக மனோ கணேசனினால் சிங்கள மொழியில் முன்வைக்கப்படும் கருத்துக்களையும் காதில் வாங்கிக் கொள்ளாது அலட்சியமாக இருந்து வருவதாகவும் மனோ கணேசன் தனது முக நூலில் சூசகமாக தொட்டுக்காட்டிவருகின்றார்.

சமஷ்டி என்ற பேச்சிற்கே இடமில்லையாம் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு காணப்படுமாம். தமிழ்க் கூட்டமைப்பு எதிர்பார்ப்பது போன்று மாகாண அதிகாரங்களை ஒருபோதும் வழங்க முடியாதாம் இது பௌத்தர்களுக்குச் சொந்தமான நாடாம் என மைத்திரி அடுக்கிவரும் அறிக்கைகளால் தமிழ்க் கூட்டமைப்பு செய்வதறியாத நிலையில் உள்ளது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆனவுடன் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்து கட்டுவாராம்.

அதன்பிற்பாடு அனைத்து கட்சியினரதும் ஆதரவுடன் இரண்டு வருடம் தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவாராம். அந்த அரசாங்கந்தான் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்குமாம்.

வட்டுக்கோட்டைக்கு வழி கேட்க துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு எனச் சொன்ன பாக்கு வியாபாரி போல எம்முன்னே நிற்கின்றார் எதிரணி வேட்பாளர் மைத்திரி சிறிசேன. இவரை நம்பி எப்படி மக்களிடம் வாக்கு கேட்பது என்னும் முழிசாட்டத்தில் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கள்ளமௌனம் காக்கின்றனரோ?

தேசிய அரசாங்கமென்பது நாட்டில் வாழும் சகல தரப்பு மக்களின் பங்கு பற்றுதலுடன் அமைக்கப்பட வேண்டியது. சிறுபான்மை மக்களை நோக்கி எத்தகைய உத்தரவாதங்களை எதிரணி வேட்பாளர் மைத்திரியாலோ தேசிய அரசாங்கத்தின் பிரதமராக வரப்போகும் ரணில் விக்கிரமசிங்கவாலோ வழங்க முடியும்? என்கின்ற கேள்விகளுக்கு தமிழ் மக்களுக்கு விடை தெரிந்தாக வேண்டும்.

இல்லாவிடின் 1965ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா உருவாக்கிய தேசிய அரசாங்கம் என்னும் பித்தலாட்டம் மாதிரி இதுவும் போய்விடமுடியும்.

1965ஆம் ஆண்டு தேர்தலின் போது ஆட்சியமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மையை பெற முடியாது போன டட்லி சேனநாயக்க தனக்கு ஆதரவு தெரிவித்தால் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தயார் என அறிவித்தார். அதன்படி எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். சில ஒப்பந்தங்கள் பண்ணப்பட்டு தேசிய அரசாங்கமும் அமைந்தது.


ஆன்ால் டட்லி வாக்களித்தபடி தமிழ் மொழி அமுலாக்க சட்டமூலத்தை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. தமிழ் மக்களுக்கு ஓரளவு சுயாட்சியை வழங்கக் கூடிய மாவட்ட சபைகளை உருவாக்கும் மசோதாவும் டட்லி தலைமையிலான யு.என்.பி உருவாகிய தேசிய அரசாங்கத்துக்குள் இருந்த சிங்கள இனவாதிகளின் (இன்றைய சிஹல உறுமய போன்ற) எதிர்ப்பின் காரணமாக தோல்விகண்டது. இறுதியில் தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறியது.

இது போன்ற ஒரு தேசிய அரசாங்க கனவுக்காகதான் தமிழ் மக்களின் வாக்குகளை மைத்திரிக்கு வழங்குமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரப் போகின்றதா? அல்லது அந்த படிப்பினைகளோடுதான் மைத்திரியை ஆதரிக்கவேண்டும் என தாம் நேரடியாக கோர மாட்டோம் என்று சம்பந்தன் சொல்லிவருகின்றாரா?

எப்படியோ எடுத்ததற்கெல்லாம் குய்யோ முறையோ என்று துள்ளிக்குதிக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் காத்துவரும் கள்ளமௌனம் விரைவில் கலைந்து தானே தீரவேண்டும்.

# கொழும்புடன் புதுடில்லி தொடர் மந்திராலோசனை

## அகதிகள் விவகாரம் கருப்பொருள்



தமிழகத்தில் இலங்கை அகதிகளை அவர்களின் தாயகத்துக்கு திருப்பி அனுப்புவது தொடர்பான ஆய்வை மேற்கொள்வதற்காக, தமிழக அரசின் முடிவுக்காக மத்திய அரசு காத்திருக்கிறது என்று, இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர் கே.பி. ராமலிங்கம் எழுப்பியிருந்த கேள்விக்கு வி.கே. சிங் எழுத்துப்பூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை அளித்துள்ள பதிலின் விவரம் வருமாறு,

இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கை அகதிகளை மீண்டும் அவர்களின் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவது குறித்து இலங்கை அரசுடன் மத்திய அரசு பேசி வருகிறது.

மேலும், இலங்கையின் தமிழ்த்தேசியக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களுடனும் மத்திய அரசு பேசி வருகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியாக இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

மத்திய உள்துறை, வெளியுறவுத் துறை அமைச்சகங்களின் அதிகாரிகள் குழு தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டு, அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிய விரும்புகிறது.

இலங்கைக்குத் திரும்ப முடிவெடுக்கும் அகதிகள், நம் நாட்டிடம் இருந்தும் இலங்கை அரசிடமிருந்தும் எத்தகைய வசதிகளை எதிர்பார்க்கின்றனர் என்பதை அறிவதற்கு இந்த ஆய்வு அவசியம் என மத்திய அரசு கருதுகிறது.

இதற்கான ஏற்பாட்டை செய்யும்படியும், இந்த விவகாரத்தில் என்ன முடிவெடுப்பது என்பது குறித்தும் தமிழக அரசிடம் வெளியுறவுத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த விஷயத்தில் தமிழக அரசின் முடிவுக்காக வெளியுறவுத் துறை காத்திருக்கிறது என்று வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஆட்சியில் இருந்த போது, உள்துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழு தலைவராக வெங்கய்ய நாயுடு இருந்தார்.

அவரது தலைமையிலான குழு, இலங்கை அகதிகளை மீண்டும் தாயகத்துக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது? என்று பலமுறை உள்துறை அமைச்சகத்துக்கு கேள்வி எழுப்பியது.

அதற்கு அப்போதைய மத்திய அரசு அளித்த பதில் போன்றே தற்போது வி.கே. சிங் எழுத்து பூர்வமாக அளித்துள்ள பதிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மைத்திரியின் பக்கம் மற்றுமொருவர் தாவல்

ரத்கம பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் மைத்திரி ஞானபால டி சில்வா எதிரணி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு தெரிவிக்க தீர்மானித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை சிறிகொத்த ஐ.தே.க. தலைமையகத்திற்கு சென்ற மேற்படி உறுப்பினர் எதிர்க்கட்சியில் இணைந்து கொள்வதாக அறிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தால் மக்களுக்கு மேற்கொள்ளப்படும் மோசடிக்கு எதிராக தான் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

# தேர்தல்களைக் கண்காணிக்க சட்டத்தரணிகளின் பிரத்தியேகக்குழு

## நடக்கிறது ஏற்பாடு

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் சட்ட விதிமுறை மீறல் குறித்த முறைப்பாடுகளை முன்வைப்பது தொடர்பில் தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவொன்றை அமைக்க சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் காலங்களில் எந்தவொரு தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்தும் மக்களுக்கு முறைப்பாடுகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளுக்கு நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நகரசபை மற்றும் பிரதேசசபைகளில் அகற்றப்படாதுள்ள கட்டவுட் மற்றும் பேனர்கள் தொடர்பிலும் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சட்டத்தரணிகள் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் தேர்தல் சட்டங்களை பொலிஸார் உரிய முறையில் மேற்கொள்ளாவிடின் பொலிஸ் மா அதிபருக்கு எதிராகவும் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# தேர்தல்கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா?

## அழுத்தம் கொடுக்க கோருகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு மக்கள், அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.

தலைவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றார்களா இல்லையோ மக்கள் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக்கொள்ள அவர்களை நிர்ப்பந்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பி. யின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை இரதது செய்தல், 17 ஆவது திருததச் சட்டத்தை அமுல்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

எனினும், இவ்வாறான பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத அனுபவங்களை மக்கள் ஏற்கனவே கொண்டிருக்கிறார்கள் என அவர் தெரிவித்துள்ளார். மக்கள் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து தமது வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு அமைய சம்பளங்கள் உயர்த்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தென்னை அபிவிருத்தி சபையில் 62 பேருக்கு நிரந்தர நியமனம்

தெங்கு பயிரிடும் சபையில் இதுவரை சமயா சமய ஊழியர்களாக கடமை புரிந்த 62 பேருக்கு நிரந்த நியமனம் வழங்கும் நிகழ்வு, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தலைமையில் பத்தரமுல்லை செத்சிறிபாய விலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி அளித்துள்ள உறுதிமொழிக்கிணங்கவே இவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

தெங்கு பயிரிடும் சபையில் 180 தினங்கள் கடமை பரிந்த தொழிலாளர்கள் ,சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் மற்றும் இராசாயன உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோரே இவ்வாறு நிரந்தர நியமனம் பெற்றவர்களாவர்.

# ஜனநாயக ஆட்சிக்கு மாடமாளிகை தேவையில்லை

## இது மைத்திரியின் மந்திரம்



மன்னர்களைப் போன்று மாட மாளிகையிலிருந்து எனது ஆட்சியைத் தொடரப் போவதில்லை. அலரி மாளிகைக்கோ காலடி எடுத்துவைக்கப் போவதுமில்லை. மாறாக ஜனாதிபதி செயலகத்தினூடாகவே நாட்டு மக்களின் பணியைத் தொடர்வேன்.

இவ்வாறு பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவிததார். மேலும் ஊழல் மோசடிகள் அற்ற தரமான அபிவிருத்தியை நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பேன் எனவும் அவர் உறுதியளித்தார். கொழும்பு - கிருலப்பனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்படி விடயங்களைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்குக் கிடைத்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டு நாட்டுக்கு பிரயோசனமான 17 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 18 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 2005 ஆம் ஆண்டு அப்பாவி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு நாம் வீதியிலேயே போராடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தோம்.

அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாது ஒழிக்கப்பட்டபோது பிரபாகரனைக் கொன்ற சந்தோஷத்தில் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் வீதியில் இறங்கி பாற்சோறு பகிர்ந்து சாப்பிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மா மன்னனே என்று மக்கள் கோஷமிட்டனர்.

இதற்கமையவே ஜனாதிபதி மகிந்தவுக்கு தான் அரசன் ஆகவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதனாலேயே 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஊழல் மிக்க குடும்ப ஆட்சியை ஜனாதிபதி மகிந்த நடாத்தி வருகின்றார். நாட்டில் நீதி செத்துவிட்டது. எனவே, நான் ஜனாதிபதியானதும் நாட்டில் ஊழல் மோசடியற்ற - நீதியான ஆட்சியை நடாத்துவேன் என்றார்.

# மனித உரிமை பாதுகாப்பு பகிரங்க உறுதிமொழி வேண்டும்

## வேட்பாளர்களைக் கோருகிறது மன்னிப்புச்சபை

நாட்டில் மனித உரிமை கள் பாதுகாப்பு, ஊக்குவிப்பு, சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் கடப்பாடுகள் நிறைவேற்றல ஆகியவற்றுக்கு பகிரங்கமான உறுதிமொழியை ஜனாதிபதி வேட்பாளர்கள் வழங்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுகுறித்து மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கையில் சகல மட்டங்களிலும் காணப்படும் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவது முக்கியமானது. எனினும் மனித உரிமைகள் நிலைவரத்தை சீர்செய்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இலங்கை எதிர்கொள்ளும் ஒரு பகுதி சவால் மாத்திரமே இதுவாகும்.

இலங்கையை தசாப்த காலமாக சீரழித்துள்ள மனித உரிமை மீறல்களுக்கும், துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுத்துள்ள தண்டனையிலிருந்து விடுவிக்கப்படும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவரு வதாகவும், இன மத மற்றும் பால் ரீதியான பாகுபாடுகள் வன்முறைகளுக்கு முடிவு காண்பதாகவும் உறுதி மொழி பகிரங்கமாக வழங்கப்படவேண்டும்.

முதல்கட்ட நடவடிக்கையாக வேட்பாளர்கள் அரசமைப்பின் 18 ஆவது திருத்தம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றை இரத்துச்செய்ய வேண்டும் எனவும் மன்னிப்புச்சபை கேட்டுக்கொண்டுள்ளது.

# சனசமூக நிலையங்களுக்கு மாநகர சபையின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களும் 2015 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாத முடிவிற்குள் நடாத்தி விபரங்களை சமர்ப்பிக்குமாறு சனசமூக நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சனசமூக நிலையங்கள் கூட்டத்தை நடாத்தி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்து விபரத்தையும் நிர்வாக உறுப்பினர்களின் பெயர், தனிப்பட்ட முகவரி, தொலைபேசி இலக்கம், வங்கியின் பெயர், வங்கிக்கணக்கு இலக்கம் என்பவற்றையும் யாழ். மாநகர சபைக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# முன்பள்ளியின் ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

பட்டர்பிளை முன்பள்ளி நிறுவனத்தின் கிறிஸ்மஸ் ஒளிவிழாவும் - பட்டமளிப்பு விழாவும் இன்று பிரான்பற்று அருள் அமுதீஸ்வரி திருமண மண்டபத்தில் காலை 9 மணி முதல் 11 மணி வரை இந் நிகழ்வு இடம்பெறும்.

இந் நிகழ்வுக்கு ஆசியுரையினை சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள், வண.பிதா ஜி.மங்களதாஸ் ஆகியோர் வழங்குவர்.

பிரதம விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். இன்றைய தினம் பட்டர்பிளை நிறுவனத்தில் பயின்ற மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் இடம்பெறும். (92)

# சொல்லுக்கு செயல்வடிவம் கொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## வடமராட்சி கடற்றொழில் அபிவிருத்தி குழு உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சொல்லுக்கு செயல் வடிவம் கொடுத்து உண்மைத்தன்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் மக்களுக்கான சேவைகளை ஆற்றி வருபவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என வடமராட்சி கடற்றொழிலாளர் அபிவிருத்தி குழு உறுப்பினர் நவதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



பருத்தித்துறை முனைப்பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் இளைப்பாற்று மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தொழிற்றுறைசார்ந்த உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது குறைகள், தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் எமது பகுதிகளுக்கு நேரில் வருகைதந்து ஆராய்ந்து அவற்றுக்கான உதவிகளை அவ்வப்போது அமைச்சர் நிவர்த்தி செய்து வருகின்றார்.

அந்தவகையில் சிறந்த எதிர்கால நோக்கையும், திட்டமிடலையும் கொண்ட நிதர்சனமுள்ள தலைவராகவும் அமைச்சர் விளங்குகின்றார்.

இந்நிலையில் உரிமையையும விடிவையும் பெற்றுத் தருவோம என கூறிக்கொண்டு வடக்குமாகாண சபையை கைப்பற்றிய கூட்டமைப்பினரால் இதுவரையில எவ்விதமான மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களையும் முன்னெடுக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்த நவதீஸ்வரன், தங்களுக்குள்ளேயே முரண்பட்டுக் கொள்ளுகின்ற நிலைமையே தற்போது காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, மக்களின் வாழ்வாதாரத்தையும், அபிவிருத்தியையும் பாதுகாத்து பலப்படுத்துவது மட்டுமன்றி நீடித்த அரசியல் உரிமையையும் வென்றெடுப்பதே எமது இலக்காகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ரமேஸ்கண்ணா, ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் ரட்ணகுமார், வல்வெட்டித்துறை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் கைலாஜினி, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# ஊடகத்துறைக்கான கலாபூஷணம் விருது

(யாழ்ப்பாணம்)



இலங்கை அரசினால் வழங்கப்படும் கலாபூஷணம் விருதில் ஊடகத்துறைக்கான விருது வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.என்.எஸ் திருச்செல்வத்திற்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சியை சேர்ந்த இவரின் கல்வி, கலை, கலாசார, சமய சமூக, பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில் இவருக்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் பிரதம நூலகராக கடமையாற்றியுள்ள இவர் ஊடகத்துறையில் 35 வருடங்கள் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# கட்டாக்காலி நாய்களால் தொல்லை

யாழ்.நகர் பகுதி வீதிகளில் காலை வேளைகளில் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்ட வீதி பகுதிகளில் இவற்றின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதுடன் இவை வீதிகளையும் அசிங்கம் செய்து விட்டுச் செல்கின்றன. இதனால் பாதசாரிகள் மற்றும் இந்த வீதிகளை அண்டியுள்ள பொது மக்கள பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் மழை பெய்யும் வேளையில் வெள்ள நீருடன் அவற்றின் கழிவுகள் கலந்து செல்வதால் பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படும் எனவும் குழந்தைகள் விளையாடும் போது அவர்களுக்கு நோய்கள் பல ஏற்பட வாய்ப்புள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். எனவே கட்டாக்காலிகளாக திரியும் நாய்களை வீட்டு உரிமையாளர்களோ அல்லது அதிகாரிகளோ கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)







ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக்கதம்ப விழாவும் அண்மையில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெற்றபோது.... (18)

# முரசின் இன்றைய பலன்

(14.12.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி.
அட்டமி / சித்தாமிர்தம்.
பூர நட்சத்திரம் காலை பி.ப. 02.09 வரை. பின் உத்தரம்.
இராகு காலம் 04.51 - 06.21 வரை. சுபநேரம் 09.21 - 10.51 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
சொத்துப்பங்கீடு சுமுக நிலையைத்தரும், திகதி தப்பிய பொருட்கள் பற்றி விழிப்புத் தேவை.

**ரிஷபம்**
எவருக்கும் உறுதிமொழி வழங்க வேண்டாம், சட்டத்துக்கு முரணான பிரயாணத்தால் எச்சரிக்கைக்கு ஆளாதல்.

**மிதுனம்**
வியாழசுகம் இருப்பதினால் புதிய முயற்சி ஆரம்பிக்க விழைதல், கருத்தரங்குகளில் பங்குபற்றுதல்.

**கடகம்**
தாயாரின் நோய்நிலை கட்டுப் பாட்டுக்குள் வருதல், சுபச் செலவு கொண்டாட கடன்படல்.

**சிம்மம்**
கௌரவப்பதவி கிடைக்க பிரமுகர் சிபார்சு செய்தல், அயலவரின் தொல்லை அகலுதல்.

**கன்னி**
வியாபாரப் போட்டியினால் பகைமை ஏற்படல், விஷ ஜெந்துக்களின் தாக்கம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.

**துலாம்**
புதியன கிட்ட வெளியூர் பணம் வந்தடைதல், முரண்பட வந்தவருக்கு நியாயத்தை எடுத்துக் கூறுதல்.

**விருச்சிகம்**
இடமாற்றம் தற்காலிகமாக ஒத்தி வைத்தல், பொருள் கொளவனவிற்கு திடீர் பயணம் ஏற்படல்.

**தனுசு**
கடனைப்பெற முறைப்பாடு செய்ய விழைதல், அரசியல் விமர்சனத்தினால் நட்புக்கெட்டு விடல்.

**மகரம்**
இழுபட்ட விவாகம் நிறைவேறும் இனிய செய்தி கிட்டுதல், அடகுப பொருளை மீட்க கடன்படுதல்.

**கும்பம்**
நோயின் தாக்கத்தினால் பதகளிப்பு நிலை தோன்றல், ஆயுதங்களுடன் கவனமாக பழகுங்கள்.

**மீனம்**
விபத்திலிருந்து தப்புதல், மாதாவின் நோய் குணமடைவதி னால் மீண்டும் பணிக்குச் செல்லல்.




வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களமும், வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்திய 5ஆவது வர்ண இரவு நேற்று முன்தினம் சாவகச்சேரி நகர சபை மண்டத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா பங்குகேற்றார். இதில் 274 வீர, வீராங்கனைகளுக்கும், 34 பயிற்றுவிப்பாளர்களுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (93)

விளையாட்டு செய்திகள்

## வில்லியம்ஸன் சிறப்பாட்டம்; வென்றது நியூசிலாந்து

(சார்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் சார்ஜாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி ஹென்றி, மக்கலம் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கப்டன் மிஸ்பா உல் ஹக் மற்றும் மொகமட் ஹபீஸ் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து ஆடியதுடன் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொகமட் ஹபீஸ் 76, கப்டன் மிஸ்பா உல் ஹக் 47 ஓ்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹென்றி நான்கு, நதன் மக்கலம் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 253 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி வில்



லியம்ஸனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றியைப் பதிவு செய்தது. இறுதியில் நியூசிலாந்து அணி 46 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்க்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் வில்லியம்ஸன் ஆட்டமிழக்காது 70, டேவிச் 58, பிரவுலின் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொகைல் மூன்று, அப்ரிடி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நாளை சார்ஜாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலையின் தடகளப் போட்டி

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30மணி வரையும் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர். ஏ. சிவநாதன், அவரது பாரியார் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி. எஸ். சிவநாதன், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர், ஏ. மகீதரன், , மோதர, ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வருகை தந்து உதவுமாறு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகும் விளையாட்டு அவையும் கேட்டுள்ளது.


## 5ஆவது உலக கிண்ணத்தில் மஹேல, அப்ரிடி

(டுபாய்)

உலக கிண்ண போட்டித் தொடர் ஒன்றில் ஐந்தாவது முறையாகவும் மஹேல ஜெயவர்த்தன, அப்ரிடி போன்ற அனுபவமிக்க வீரர்கள் விளையாடுவதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான உலக கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பெப்ரவரி 14ஆம் திகதி தொடக்கம் மார்ச் 29ஆம் திகதி வரை, அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் நடைபெறவுள்ளது.

இந்த உலக கிண்ணத்தில் விளையாடும் மிகுந்த அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஜெயவர்த்தன, அப்ரிடி. இருவரும் ஐந்தாவது முறையாகவும்




விளையாடுவதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தெரிவித்துள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் ஜெயவர்த்தனவும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடியும் இந்த உலக கோப்பைக்கான 30 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றுள்ளனர். இருவரும் 15 பேர் கொண் அணியிலும் இடம்பெறுவார்கள்.

இதன்மூலம் அவர்கள் ஐந்தாவது உலக கிண்ணத்தில் விளையாடும் பெருமையை பெறுவார்கள்.

1999ஆம் ஆண்டு உலக கிண்ணத்திலிருந்து அவர்கள் தொடர்ந்து(2003, 2007, 2011) விளையாடி வருகிறார்கள். இதில் ஒருமுறை கூட இருவரும் தங்கள் அணிக்காக கிண்ணத்தை பெற்றுக் கொடுக்கவில்லை. இந்த முறை இருவரும் உலக கிண்ணத்தை பெற்றுக் கொடுக்கும் ஆர்வத்தில் உள்ளார்.

பாகிஸ்தானை் சேர்ந்த மியான்டட், சச்சின் ஆகியோர் தான் அதிகபட்சமாக 6 உலக கிண்ணத்தில் விளையாடியுள்ளனர். மியான்டட் 1975, 1979, 1983, 1987, 1992, 1996 ஆகிய உலக கிண்ணத்திலும், சச்சின் 1992, 1996, 1999, 2003, 2007, 2011, ஆகிய உலக கிண்ணத்திலும் விளையாடியுள்ளார்.

இதில் 1992இல் பாகிஸ்தானும், 2011இல் இந்தியாவும் உலக கிண்ணத்தை வென்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# நதன் லயனின் சுழலில் சுருண்டது இந்தியா

## 2ஆவது இனிங்ஸிலும் சதம் விளாசிய ஹோலியின் போராட்டம் வீண்



(அடிலெய்ட்)

நதன் லயனின் சுழற்பந்து வீச்சின் மூலம் இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 48 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றது. இரண்டாவது இனிங்ஸிலும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் விளாசிய கப்டன் ஹோலியின் போராட்டம் இறுதியில் தவிடுபொடியானது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட போடர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டில் நிறைவு பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 517 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 444 ஓட்டங்களைப் பெற்றது.

73 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் டேவிட் வோர்னர் 102 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கே.வி. சர்மா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 362 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 57 ஓட்டங்களைப்பெற்றவேளை பறிகொடுத்துடன் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் ஹோலி முரளி விஜய்யுடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சாளர்களை சிறப்பான முறையில் எதிர்கொண்டு ஓட்டங்களை வேகமாகச் சேகரித்ததுடன் அணியின் வெற்றியையும் உறுதி செய்யும் வகையில் செயற்பட்டது. இருப்பினும் இந்த ஜோடி 185 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (துரதிஷ்டவ்மாக 99 ஓட்டங்களைப் பெற்றவேளை முரளி விஜய் ஆட்டமிழந்தார்) பிரிக்கப்பட்டது. இதன் பின்னர் ஒரு முனையில் கப்டன் ஹோலி சதம் கடந்து பொறுப்புடன் ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டவண்ணமிருந்தன. குறிப்பாக நதன் லயனின் சுழற்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய வீரர்கள் திணறியதுடன் வேகமாக விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தனர். இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 315 ஓட்டங்களைப் பெற்று 48 ஓட்டங்களால் பரிதாபகரமாகத் தோல்வியைத் தழுவியது. இதில் கப்டன் ஹோலி 175 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள் அடங்கலாக 141 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் ஹோலி பதிவு செய்த எட்டாவது சதமாக இது அமைந்தது. அத்துடன் முதல் இனிங்ஸிலும் ஹோலி 115 ஓட்டங்களைக் குவித்தார். மற்றும் முரளி விஜய் 234 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 10 பவுண்டரிகள் அடங்கலாக 99, புஜாரா 21, ரோகித் சர்மா 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட நதன் லயன் 152 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி பிறிஸ்பேனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எப்.ஏ. கிண்ண கால்பந்து இமையாணன் மத்தியில் இன்று


(இமையாணன்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் காகில்ஸ் வெற்றிக்கிண்ண எப் ஏ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றது.

இதில் வடமராட்சி லீக்கிற்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக இடம்பெறாதிருந்த போட்டிகளின் முதல் சுற்று இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் கலைமதி விளையாட்டுக் கழ்கத்திற்குமிடையிலான போட்டி இமையாணன் மத்தி விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (48)



வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட முழங்காவில் பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறியில் பயிற்சியை நிறைவு செய்த பயனாளிகளுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (36)

# சமூக சீரழிவுகளை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(கரணவாய்)

நெல்லியடி பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் சட்ட விரோதமான செயல்கள், குற்றச் செயல்கள் மற்றும் மது, போதைப் பொருள் பாவனை உள்ளிட்ட சமூகச் சீரழிவுகள் என்பனவற்றை முற்றாக கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களும் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி சுமித் பெரரா கேட்டுள்ளார்.

நெல்லியடிப் பகுதியில் தற்போது சட்டவிரோத செயற்பாடுகள், சமூக சீரழிவுகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளமை தொடர்பில் பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்று வந்த கள்ளச் சாராயம் விற்பனை, முகப்புத்தகப் பிரச்சினை, வன்முறை, சமூகப் பிரச்சினைகள், இளைஞர்களின் அடாவடித்தனங்கள், இரவு வேளைகளில் மதுப் பிரியர்களின் அட்டகாசம், வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனம் செலுத்துவோர் போன்ற பல செயற்பாடுகளுக்கு தற்போது தீர்வு எட்டப்பட்டுள்ளதுடன் இத்தகைய சமூக விரோதச் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முக்கிய பங்கு பொது மக்களுக்குண்டு. அத்துடன் கிராம மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் தங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் சமூகச் சீரழிவுகளை துணிச்சலுடன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவ்விடயம் உடனடியாக ஆராயப்பட்டு தீர்வு காணப்படும்.

மேலும் உள்ளூர் கிராமங்களில் நடைபெறும் சட்ட விரோதச் செயற்பாடுகள் வன்முறைகளைக் கட்டுப்படுத்தி பொது மக்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மக்கள்; பொலிஸார் என்ற வகையில் எம்மிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அந்த வகையில் சட்ட விரோதமான செயற்பாடுகளை முற்றாக கட்டுப்படுத்த பொது மக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (18)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சிற்றுண்டிச்சாலை அமைக்கப்படுமா?

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் சிற்றுண்டிச்சாலை இன்மையால் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் தமது தேவைகளின் நிமித்தம் செல்லும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அது மட்டுமன்றி, குறித்த பிரதேச செயலக சுற்றாடலில் தரம் வாய்ந்த உணவகங்கள் ஏதும் இல்லையெனவும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உணவுகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் தமக்குத் தேவையான உணவையோ அல்லது குடிபானங்களையோ பெற்றுக் கொள்வதற்கு மானிப்பாய், சங்கானைப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இப்பிரதேச செயலகத்தில் சிற்றுண்டிச்சாலையொன்றை அமைக்க அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (66)

# சிறப்புற நடைபெற்றது கவிதை நூல் அறிமுக விழா

பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த. ஜெயசீலனின் புயல் மழைக்குப் பின்னான பொழுது கவிதை நூல் அறிமுக விழா பருத்தித்துறை ராஜாராணி சேவை இல்ல மண்டபத்தில் எழுத்தாளர் கலா பூஷணம் குப்பிளான் ஐ. சண்முகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ராஜாராணி இல்ல இயக்குநரான கலைப்பரிதி யோ. இருதயராஜா தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது. இருதயராஜா வரவேற்புரையையும் சிவஸ்ரீ வே. தியானந்த ராஜாகுருக்கள் ஆசியுரையையும் நிகழ்த்தினர்.

பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயா. ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் எஸ். ரவீந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

நூல் அறிமுகவுரையை சாகித்தியரத்தினா, தொணியான் (நடேசு) நிகழ்த்தினார். வெளியீட்டுரையை கவிஞர் இ.ச. முரளிதரன் நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியைப் பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் எஸ். பத்மநாதன் பெற்றுக் கொண்டார். யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். இராஜேஸ் கண்ணன் கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரீ.கலாமணி ஆகியோர் நூல் நயப்புரைகளை நிகழ்த்தினர். நூலாசிரியர் ஏற்புரை வழங்கினார். (01)

# பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் எஸ்.பி. சாமி தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான அங்கத்தவராகப் பதிவு செய்யப்பட்டவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபைச் செயலர் கே.எம். வரதராஜ் அறிவித்துள்ளார்.

# சனிப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## மீனம்

**(பூரட்டாதி 4ஆம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)**

### நேர்மறைச் சிந்தனை கொண்ட மீன ராசிக்காரர்களே!

இதுவரை அஷ்டமத்தில் நின்று கொண்டு உங்கள் திக்கு திசையறியாது திண்டாட் வைத்ததுடன், காரண காரியமே இல்லாமல் பிரச்சினைகளில் சிக்க வைத்து, வாழ்க்கை மீதே ஒருவித வெறுப்புணர்வை ஏற்படுத்திய சனிபகவான் இப்போது 16.12.2014 முதல் 17.12.2017 வரை உள்ள காலகட்டங்களில் 9ஆம் வீட்டில் அமர்வதால் இருளில் இருந்த நீங்கள் இனி வெளிச்சத்திற்கு வருவீர்கள். எப்போதும் கோபப்பட்டு கொண்டேயிருந்தீர்களே! இனி சாந்தமாவீர்கள்.

உங்களை விட வயத்தில் குறைவானவர்கள், தகுதியில் குறைந்தவர்களிடமெல்லாம் கூனிக் குறுகி அவமானப்பட்டு நின்றீர்களே! அந்த நிலையெல்லாம் மாறும். இனி தன்னம்பிக்கையுடன் தலை நிமிருவீர்கள். குடும்பத்தினர் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த கசப்புணர்வுகள் நீங்கும். சொன்னதாக நினைத்துக் கொண்டு மனக்கசப்பால் ஒதுங்கியிருந்த உறவினர்கள் வலிய வந்துப் பேசத் தொடங்குவார்கள்.

### சனிபகவான் நட்சத்திர சஞ்சாரப் பலன்கள்:

16.12.2014 முதல் 24.01.2015 வரை மற்றும் 30.04.2015 முதல் 13.6.2015 வரை மற்றும் 06.9.2015 முதல் 17.10.2015 வரை உங்கள் ராசிநாதனும்-ஜீவனாதிபதியுமான குருவின் சாரத்தில் விசாக நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் 9ஆம் வீட்டில் சனி செல்வதால் பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். நாடாளுபவர்கள், தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். தோற்றப் பொலிவு கூடும். புது வாய்ப்புகளும், பொறுப்புகளும் தேடி வரும்.

14.6.2015 முதல் 5.9.2015 வரை உங்கள் ராசிக்கு அஷ்டமத்துச் சனியாக 8ஆம் வீடான துலாம் ராசி விசாகம் நட்சத்திரம் 3ஆம் பாதத்தில் சனி செல்வதால் இக்காலகட்டத்தில் வீண் பிரச்சினைகள், காரியத் தடைகள், பண இழப்புகள், ஏமாற்றங்கள், எதிலும் பிடிப்பற்றப் போக்கு வந்து செல்லும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும்.

30.04.2015 முதல் 01.08.2015 வரை குருபகவானின் விசாக நட்சத்திரத்திலேயே சனி வக்கரித்து செல்வதால் புதிய திட்டங்கள் நிறைவேறும். அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். தன்னிச்சையாக செயற்பட தொடங்குவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

உங்கள் இலாபாதிபதியும்-விரையாதிபதியுமான சனிபகவான் தன் சுய நட்சத்திரமான அனுஷ நட்சத்திரத்தில் 25.01.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 18.10.2015 முதல் 15.11.2016 வரை செல்வதால் இக்காலகட்டத்தில் திடீர் யோகம், பண வரவு உண்டாகும். புது வேலை கிடைக்கும். சொந்த ஊரில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சொந்த-பந்தங்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை கூடும்.

15.3.2015 முதல் 29.04.2015 வரை மற்றும் 19.5.2016 முதல் 12.08.2016 வரை உள்ள காலகட்டங்களில் சனிபகவான் அனுஷ நட்சத்திரத்திலேயே வக்ரமாவதால் சோர்ந்திருந்த நீங்கள் உற்சாகமாக செயற்படுவீர்கள். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். வேற்றுமதத்தவர்கள், வெளிநாட்டிலிருப்பவர்கள், பிறமொழிக்காரர்களால் ஆதாயமடைவீர்கள். அவ்வப்போது வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகமாகும்.

16.11.2016 முதல் 17.12.2017 வரை உங்கள் சுக-சப்தமாதிபதியான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் சனிபகவான் செல்வதால் மனைவிக்கு வேலை கிடைக்கும். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். வாகன வசதி பெருகும். தாய் சொத்து கைக்கு வரும். தாய்வழி உறவினர்களால் உதவிகள் உண்டு.

சனிப்கவான் 3ஆம் வீட்டை பார்ப்பதால் சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசாங்க விடயம் சாதகமாக முடியும். சொத்து வாங்குவது, விற்பதில் சிக்கல்கள் வந்து போகும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். சனிபகவான் இலாப வீட்டைப் பார்ப்பதால் மதிப்பு, மரியாதை கூடும்.

கன்னிப்பெண்கள் தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். காதலும் இனிக்கும், கல்வியும் இனிக்கும். மறதி, மந்த நிலையிலிருந்து விடுபடுவீர்கள். கல்யாணம் கூடிவரும். பெற்றோர் உங்கள் உணர்வுகளை மதிப்பார்கள். புது வேலை கிடைக்கும். மாணவ-மாணவிகள் உயர்கல்வியில் வெற்றி பெறுவீர்கள்.. வேற்றுமதத்தை சேர்ந்தவர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள். ஆசிரியரின் அன்பைப் பெறுவீர்கள்.

இந்த சனி மாற்றம் உங்களை தலை நிமிர வைப்பதுடன், நீண்ட நாள் ஆசைகளையும் நிறைவேற்றுவதாகவும் அமையும்.

**பரிகாரம்!**

**சனிபகவானுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றுங்கள். ஆஞ்சநேயர் வழிபாடு உங்கள் வாழ்வில் தடையை அகற்றி முன்னேற்றத்தை கொடுக்கும். சனிக்கிழமை பெருமாள் கோவிலுக்கு சென்று வாருங்கள். அஷ்டமி நாளில் வைரவரை வணங்கி வாருங்கள்.**




# புற்றுநோய் 2

- பத்ரி -

**(4) கெமோதெரப்பிக்கு முன் மியூட்டேஷன் என்பதை என்னவென்று பார்த்துவிடலாம்.**

நம் ஒவ்வொரு கலத்திலும் இருக்கும் அடிப்படை "போர்முலா, டி.என்.ஏ எனப்படும். இது ஒரு நீண்ட பெரிய இரசாயன மூலக்கூறு. இதில்தான் நம் உடம்புக்குத் தேவையான பல்வேறு புரதங்களையும் இரசாயனங்களையும் உருவாக்குவதற்கான குறிப்புகள் உள்ளன. இந்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நம் கலங்கள் இந்த இரசாயனங்களைத் தயாரிக்கின்றன. ஆனால்




சில நேரங்களில், கல பிளவு நடக்கும்போது டி.என்.ஏவைப் பிரதி எடுக்கும்போது ஒருசில தவறுகள் நிகழ்ந்துவிடுகின்றன. இந்தத் தவறுகளை, மாற்றங்களைத்தான் மியூட்டேஷன் என்கிறோம்.

இவ்வாறு ஏற்படும் எல்லா மாற்றங்களும் கான்சரை உருவாக்கா. ஒருசில மாற்றங்கள் கான்சர் ஆவதும் உண்டு.

ஒவ்வொரு கலத்திலும் பல கட்டுப்பாட்டு இரசாயனங்கள் உண்டு. கலம் பிரியவேண்டும் என்ற ஆணையைத் தெரிவிக்க ஒரு குறிப்பிட்ட இரசாயனம் தேவை. கலங்கள் பிரிந்து ஒரு குறிப்பிட்ட அளவு கலங்கள் உருவானதும் உடனே இது நின்றுவிடும். ஆனால் கான்சர் மியூட்டேஷனில் இது அடிபட்டுவிடும். ஒவ்வொரு கான்சர் கலமும், "இன்னும் பிரி, மேலும் பிரி" என்று தறிகெட்டு, பிரிந்து பிரிந்து ஒன்று மிகப் பலவாக ஆகும். நம் டி.என்.ஏவில் இருக்கும் மற்றொரு ஜீன், ட்யூமர் சப்ரெஸர் ஜீன். இதன் வேலை, கலங்கள் கொத்து கொத்தாக உருவாகாமல் தடுப்பது. எல்லா கலங்களிலும் இருக்கும் இந்த ஜீனின் இரண்டு பிரதிகளும் மியூட்டேஷனில் அடிபட்டால் அவ்வளவுதான். இந்த இரண்டு மியூட்டேஷன்களும் சேர்ந்து ஏற்பட்டால் கான்சர் உருவாகும். அதாவது முதலாவது "ஆக்சிலரேட்டர் ஜாம் ஆவது". இரண்டாவது, "பிரேக் செயலிழந்துபோவது".

இரண்டும் சேர்ந்து காரை ஆக்சிடெண்டில் கொண்டுபோய் விட்டுவிடும்.

**(5) கெமோதெரப்பி என்றால் என்ன?**

சிலவகை இரசாயனங்கள், கலம் பிரிவதைக் கடுமையாகத் தடுக்கக்கூடிய விஷங்கள். பலவித ஆராய்ச்சிகளின் மூலம் இம்மாதிரியான இரசாயனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை கான்சர் கலங்கள்மீது இயக்கிப் பார்த்ததில் இவை கான்சர் கலங்கள் வேகமாகப் பிளந்து பரவுவதைத் தடுக்கும் சக்தி கொண்டவை என்று கண்டறியப்பட்டன. இரத்தப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், இன்னபிற புற்றுநோய்களுக்கு மிக முக்கியமான சிகிச்சை இந்த "விஷங்களே". இவற்றை குறிப்பிட்ட டோஸில் உடலுக்குள் செலுத்தினால் படுவேகமாகப் பிளந்து பரவிக்கொண்டிருக்கும் கான்சர் கலங்களை இவை அழிக்கத் தொடங்குகின்றன. மேற்கொண்டு அவை பிரியாமல், பரவாமல் பார்த்துக்கொள்கின்றன. ஆனால் அதே நேரம் நல்ல கலங்கள் வளர்வதையும் இவை தடை செய்கின்றன.

கெமோதெரப்பி என்பது மிகவும் கடுமையான வைத்தியம். மனித உயிரைக் கிட்டத்தட்ட அதன் எல்லைக்கே கொண்டுசென்று கான்சரை மட்டும் அழித்து, உயிரை மீண்டும் மீட்க உதவும் ஓர் அபாயகரமான சிகிச்சை. 'இதற்கு ஓரளவுக்கு நல்ல பலன் இருக்கிறது.

ஆனால் இன்றைக்கு கெமோதெரப்பிக்குப் பயன்படும் பல்வேறு மருந்துகளைத் தாண்டி வளரும் கான்சர்களும் உண்டு. எப்படி அன்டிபயொடிக் மருந்துகளைத் தாண்டிச் செழித்து வளரும் நுண்ணுயிரிகள் உள்ளனவோ, அதேபோலத்தான் கான்சருக்கு எதிர்ப்பு கெமோதெரப்பி மருந்துகளையும் புதிது புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

ரேடியோதெரப்பி என்பது அதிக ஆற்றல் கொண்ட எக்ஸ்-கதிரியக்கத்தை கான்சர் இருக்கும் பகுதிகள்மீது அடிப்பது. ஆரம்பத்தில் கதிரியக்கப் பண்பு கொண்ட ரேடியம் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். இன்று எக்ஸ் கதிர்கள்தான். கெமோதெரப்பி சில சுற்றுகளை முடித்தபின் ஒருசில சுற்றுகளுக்கு ரேடியோதெரப்பி நடக்கும்.

**(6) கான்சர் மருந்துகள் என்றால் என்ன? டயபெட்டீஸ், இரத்த அழுத்தம் ஆகியவை உடலில் இருக்கும்போது உயிர்வாழ சில மருந்துகளை உட்கொள்வதுபோல மருந்து சாப்பிட்டே கான்சரில் பிழைத்துவிட முடியாதா?**

ஒரு குறிப்பிட்ட வகையான இரத்தப் புற்றுநோய்க்கு (க்ரோனிக் மயலோஜீனஸ் லுகேமியா), க்லைவெக் என்ற மருந்து பயன்படுகிறது. இந்த வகைப் புற்றுநோய், சில என்சைம்களை ஊக்குவித்து கலம் பிளப்பதை அதிகரிக்கிறது. க்லைவெக் மருந்தை உட்கொண்டால் அது இந்த என்சைம்களைத் தடுத்து, இரத்தப் புற்றுநோயை நிறுத்துகிறது. சிலவகை வயிற்று கான்சர் கட்டிகளையும் க்லைவெக் தடுக்கிறது என்கிறார்கள்.

ஆனால் எல்லாவிதமான கான்சருக்கும் இதுபோன்ற மருந்து இன்னமும் வரவில்லை. இதுதான் எதிர்கால ஆராய்ச்சியில் நிகழும்.

[தொடரும்]

# த. ஜெயசீலனின் புயல் மழைக்குப் பின்னான பொழுது

- வெள்ளைக் கிருஷ்ணன் -

**போர்** ஓய்ந்த பிறகு உருவாகிய புதிய சூழலைப் பேசும் வகையில் கவிஞர் த. ஜெயசீலனின் நான்காவது கவிதைத் தொகுதி - புயல் மழைக்குப் பின்னான பொழுது. போலியோடு வந்திருக்கிறது. பெரும்பாலான கவிஞர்களும் கவிதைகளும் போர்க்காலத்தில் தேங்கியிருக்க, ஜெயசீலன் போர் முடிந்த காலத்துக்குப் பின்னான நிலைமைகளைப் பற்றிப் பாடியிருக்கிறார். ஆகவே இவை யுத்தத்திற்குப் பிந்திய கவிதைகள். இது கவனிக்கத்தக்க ஒரு விடயம். இதைக் கவிஞரே சொல்கிறார்.

"புயல் மழைக்குப் பின்னான பொழுதில்
சிதைந்துதிர்ந்த
உயிர் உடல் புதைத்து
சடங்குகளுக்கும் சாந்தி செய்து
இருளைக்கடந்து புலரும்
தொடுவானின்
பெருகும் ஒளிநோக்கி நடக்கிறேன்.
தேங்கியுள்ள
வெள்ளமும் திட்டுத்திரளாய் கருமுகிலும்
பள்ளமும் மேடும் பயஞ்சிறிதும்
பயணத்தைத்
தாமதப்படுத்தினாலும்
தர்மம் வழித்துணையாய்க் கூடவர...
இன்று குறைதீர்க்கும் தேவதைகள்
நாடிவர...
நரகத்தைச் சொர்க்கமாக்கும் நற்கரங்கள்
தேடிவர
காலத்திசைவெளி
எனை ஊக்கிப் பாடி வர
யான் நிமிர்ந்தேன்..."
என்று.




யுத்தத்திற்குப் பிந்திய எழுத்துகளில் பலவும் யுத்தகால நினைவுகளாகவும் நினைவின் வடுக்களாகவும் அக்கால நிகழ்ச்சிகளாகவும் இருக்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றுதான். யுத்தத்தின் வலியை உணரும்போது அல்லது அந்த வலியிலிருந்து நீங்க முடியாதிருக்கும்போது இந்த மாதிரி யுத்தத்தைப் பிரதிபலிக்கும் எழுத்துகளும் பிற கலை வெளிப்பாடுகளும் உருவாகுவது தவிர்க்க முடியாதது. ஆனால், அதையே தொடர்ந்தும் ஒரு சமூகம் செய்து கொண்டிருக்க முடியாது. யுத்தகால வாழ்க்கை எப்படி ஒரு காலகட்டத்தின் உண்மையாக இருந்ததோ அப்படியே யுத்தத்திற்குப் பிந்திய காலகட்டமும் ஒரு உண்மையான நிகழ்காலம். அந்த நிகழ்காலத்தில் நிகழ்பவைகளும் ஒரு முகம் உண்டு. குணம் உண்டு. மெய் உண்டு. வலியும் மகிழ்வும் என்ற உணர்வுகள் உண்டு. அந்த

"ஒரு துளி விழுந்தால்
உயராது கடல் மட்டம்
ஒரு துளியைக் கடலோடு ஒப்பிட்டால்
அது அற்பம்

ஒவ்வொரு துளிகளையும்
வெறுந்துளிகள் எனத்தவிர்த்தால்
எவ்வாறு கடல் மிஞ்சும்?
துளியும் கடல்தானோ...!"

(துளிக்கடல் - பக்கம் 68)

போருக்குப் பின்னும் புலனாய்வுப் பார்வைகள் உள்ளதை ஊடுருவி உருக்குலைக்கின்றன என்ற யதார்த்தத்தையும் ஜெயசீலன் குறிப்பிடுகிறார்.

"எங்கோ இருந்து
எமைக் கூர்ந்து
பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்
வேறு வேலை இல்லாமல்
ஏனெதற்குப் பார்க்கிறார்கள்?

"எவர் பார்த்தார், ஏன்?" எனும் ஐயம்
குருதியோடு
கறிபோடு இதயத்துள் சுழல்கையில்
பயவலியொன்று
உள்ளே பரவி உயிரும் நடுங்கிடுது!"

(புலனாய்வு - பக்கம் 69, 70)

யுத்தத்திற்குப் பிறகு, மக்களின் வாழ்க்கை இயல்பு நிலையை நோக்கி நகர்வதற்குத் துடித்துக் கொண்டிருந்தது. வாழும் முனைப்பின் உந்துதல் அப்படித்தானிருக்கும். யுத்த காலத்திலும் யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலும் ஒரு நிர்வாக அதிகாரியாக த.ஜெயசீலன் இரண்டு வகையான நிலைமைகளைச் சந்திக்க வேண்டியிருந்திருக்கிறது. இரண்டு வகையான நிலைமைகளின்போதும் மக்கள் எத்தகைய வேட்கைகளோடு வாழ்ந்தனர், வாழத்துடித்தனர் என்பதையும் ஜெயசீலன் அறிந்திருக்கிறார்.

இந்த அறிகை, அவரைப் பலவிதமான கேள்விகளுக்கும் சிந்தனைக்கும் உட்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாகவே அவர் "புயல் மழைக்குப் பிந்திய பொழுதை"ப் பற்றி அழுத்தமாகச் சிந்திக்க வேண்டியிருந்திருக்கிறது. இந்தக் கவிதைகளைப் படிக்கும்போது இதை நாம் உணர்கிறோம்.

"சுடுகனை நாம் மீண்டும்
கட்டிக்கொண்டிருக்கிறோம்
கூடு கட்டத்தெரியாத
குயில்களல்ல நாம்.
எங்களது கூடுகளும்
சுவர்களைத்தின்ன பற்றி
நன்கறியும் உலகம்....

"நிம்மதியாய் நமதுக்கு
தூங்கி எழும்ப... ஊரின் நாவூறு படாதிருக்க..."
(கட்டுவோம் நாம் நம் கூட்டை - பக்கம் 38, 39)

இன்னொரு கவிதை ஜெயசீலனின் பன்முக நோக்கை அறிமுகப்படுத்துகிறது.

"ஒவ்வொரு வானொலியும்
ஒவ்வோர் அலைவரிசை
தன்னில் இயங்குவதாய்த் தான்
மனிதர் நினைவுகளும்
ஒவ்வொரு அலைவரிசை கொண்டன..."
(அலைவரிசை - பக்கம் 05)

...பிரிந்து பிரிந்து ஒன்று மிகப் பலவாக ஆகும். நம் டி.என்.

...ஓர் அபாயகரமான சிகிச்சை. இதற்கு ஓரளவுக்கு நல்ல பலன் இருக்கிறது.

ஆராய்ச்சியில் நிச்ழ...

(தொடரும்)

நிகழ்காலம். அந்த நிகழ்காலத்தில் நிகழ்பவைக்கும் ஒரு முகம் உண்டு. குணம் உண்டு. மெய் உண்டு. வலியும் மகிழ்வும் என்ற உணர்வுகள் உண்டு. அந்த உணர்வுகளையும் அவற்றின் முக்கத்தன்மையும் இங்கே த. ஜெயசீலன் "புயல் மழைக்குப் பின்னான பொழுது" என்றாக்கியுள்ளார்.

புயலும் மழையும் அடித்து ஓய்ந்த பொழுது எப்படியிருக்கும்? அழிவின் மீதியாகவே இருக்கும். அழிவின் மீதியில் வாழ்வைக் கட்டமைப்பது எப்படியிருக்கும்? கடினமாக இருக்கும்? அப்படிக் கடினமான வாழ்க்கையைக் கட்டமைக்கும் பணி எளிதானதல்ல. ஆனால் அவசியமானது. அதுதான் இருப்பை உணர்ந்தது. அதையே ஜெயசீலன் எழுதுகிறார்

தன்னில் இயங்குவதாய்த் தான் மனிதர் நினைவுகளும் ஒவ்வொரு அலைவரிசை கொண்டன..."

(அலைவரிசை - பக்கம் 05)

இந்த மாதிரிப் பல விதங்களில் ஜெயசீலன் நம் கவனத்தைக் கோரும் புதிய கவிதைகள் பலவற்றைத் தந்திருக்கிறார். ஏறக்குறைய 20 ஆண்டுகளாக கவிதை எழுதி வரும் ஜெயசீலன், புதிய பார்வைக்குத் திரும்பியிருப்பது அவருடைய முதிர்ச்சியைக் காட்டுகிறது. தன்னனுபவங்களுக்கும் சூழலுக்கும் அமையத் தன்னை நெகிழ்ந்து கொடுத்து, மக்களை நேசிக்கும் ஒரு படைப்பாளியே காலப்பொருத்தமான படைப்புகளைத் தரமுடியும். ஜெயசீலனின் வெற்றி இதுதான்.

# சொன்னார்கள்...



**நா**ன் இந்தப்படத்துல் ரொம்பக் கஷ்டப்பட்டு நடிச்சிருக்கேன். அது வந்து சண்டைக்காட்சிகளில் நடிச்சது கிடையாது. ட்ரெயின் சண்டை, கிளைமாக்ஸ் சண்டைக் காட்சி அதெல்லாம் கூட கிடையாது. இங்க இருக்கிறவங்களோட டியட் பாடினது தான் அந்தக் கஷ்டம். சத்தியமா சொல்றேன், சோனாக்ஷிகூட டியட் பாடினது எல்லாம் ரொம்பக் கஷ்டம். சின்னக்குழந்தையா இருக்கும் போது சோனாக்ஷியப் பார்த்தது. என் மகள்கள் ஐஸ்வர்யா, சௌந்தர்யா கூட வளர்ந்தவங்க. அவங்க கூட டியட் பாடணும்னு சொன்ன உடனே எனக்கு வேர்த்துக் கொட்டுச்சி. என் முதல் படம் "அபூர்வராகங்கள்" படத்துல நடிச்சபோது கூட அந்த அளவுக்கு டென்ஷன் இருந்த தில்லை. கடவுள் நடிகர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்கணும்னு நினைச்சா ருன்னா, 60 வயசல நடிகர்களுக்கு டியட் பாடற தண்டனையைக் கொடுக்கலாம்....

- லிங்கா இசைவெளியீட்டு விழாவில் ரஜினிகாந்த்

பள்ளிப் பருவத்தில் படிப்பில் ஆர்வம் இல்லாத மாணவனாகவே இருந்தேன். பத்தாம் வகுப்பு படிக்கிற வரை அநேக வருடங்களிலும் நான் .'.பெயில் மாணவன்தான். ஒரு கட்டத்தில் படிப்பில் மோசம் என்று ஒரு தனியார் பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட்டேன். அந்த சம்பவம்தான் வேறு ஏதாவது செய்து சாதிக்க வேண்டும் என்கிற உத்வேகத்தை கொடுத்து என்னை திரைப்படக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தது. அங்குதான் அறிவுக்கு புத்தக வாசிப்பு அவசியம் என்பதை உணர்ந்து நிறைய புத்தகங்கள் படித்து, விட்ட காலத்தைப் பிடித்தேன். ஒரு படத்துக்கு ஒப்பந்தம் செய்து கையெழுத்துப் போட்டு விட்டால், வேறு எந்த வேலை களிலும் என் மனசை நுழைக்க மாட்டேன். அதேவேளையில் ஒரு படத்தை முடித்து விட்டு, அடுத்த படத்தில் ஒப்பந்தம் ஆகிற வரையில் உள்ள வெறுமையான நாள்களை புத்தகங்களும், டி.வி.டி.க்களுமே ஆக்கிரமித்துக் கொள்ளும். ஒரு மனுஷனாக எல்லா வாழ்க்கையையும் வாழ்ந்திட முடியாது. புத்தகங்களும், டி.வி.டி.க்களும் புது வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க, அனுபவிக்க வாய்ப்புக் கொடுக்கும். அந்த பலம்தான் ஒரு படத்துக்கும், அடுத்த படத்துக்கும் இடையில் இருக்கிற ஆறு மாசத்துக்கு என்னை எனர்ஜியாக வைத்திருக்கும்.

- ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம்

நானும் இயக்குநர் மணிவண்ணனும் ஒரே கல்லூரியில் படித்திருந்தாலும் எங்களிடையே பெரிய அளவில் பழக்கம் இல்லை. சினிமாவில் நடிகனாகத் தோற்றுப் போய், பெருங்குழப்பத்தில் ஐஸ்கிரீம் பார்லர், விதை விற்பனை, இரும்பு வியாபாரம் என ஏதேதோ தொழில் செய்து அதிலும் தோற்று விரக்தியின் விளிம்பில் நிற்கும் போதுதான் மணிவண்ணனைச் சந்தித்தேன். அப்போது தோற்றுப் போன நடிகனாக வேறு வழியில்லாமல் ஆர். சுந்தர்ராஜனிடம் உதவி இயக்குநராக இருந் தேன். மணிவண்ணனிடம் ஒரு கதையைச் சொல்லி "நான் இந்தக் கதையைத்தான் இயக்கப் போகிறேன்" என்று சொன்னேன். "விதவிதமாக நடித்து விட்டு, சான்ஸ் இல்லாமல் டைரக்டர் ஆகிவிடக்கூடாது" என்ற அறிவுரையுடன் "நூறாவது நாள்" படத்துக்கு என்னை வில்லனாக்கினார் மணிவண்ணன். அதுதான் இப்போது இருக்கிற இந்த சத்யராஜுக்கு வாழ்க்கை கொடுத்தது.

- சத்யராஜ்

சினிமாவில் மட்டும் அநியாயங்களை தட்டி கேட்கும் ஹீரோவாக இருக்கக் கூடாது. நிஜ வாழ்க்கையிலும் அப்படி இருந்தால்தான் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என என் அப்பா அடிக்கடி சொல்லுவார். அதைத்தான் நான் இப்போது பின்பற்றி வருகிறேன். இந்திய சட்டத்தில் ஒவ்வொரு குற்றத்துக்கும் ஒரு சட்டம் இருக்கிறது. திருட்டு வி.சி.டி.யிலும் அப்படியொரு சட்டம் இருக்கிறது. சட்டம் வெறும் சட்டமாகவே இருப்பதுதான் இங்கே பிரச்சினை. உள்ளுக்குள்ளேயே புலம்பிக் கொண்டிருந்தால் யாரும் கவனிக்க மாட்டார்கள். அதனால் நாம்தான் நம் துறையில் உள்ள பிரச்சினைகளைப் பேச வேண்டும். இந்தப் பிரச்சினையில் ரஜினியும், விஜய்யும் களம் இறங்க வேண்டும்.

- விஷால்

சில குறிப்பிட்ட கதைகளை திரைப்பட மாக்க மிகுந்த நிபுணத்துவம் தேவை. நிறையக் களப்பணியும் மேற்கொள்ள வேண்டும். ஆனால் வசந்தபாலனிடம் இத்தகைய குணாதிசயம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அவரது அரவான் திரைப்படம் வெளிவந்தபோதே இதனை நான் எழுதியிருந்தேன். அதுகுறித்தெல்லாம் அவர் கவலைப்பட்டது போல் தெரியவில்லை. எழுத்தாளர்கள் துணையிருந்தால் போதும், சினிமா கைகூடிவிடும் என்று நினைத்திருக்கிறார். தமிழில் நல்ல படங்கள் உருவாக வேண்டும் என்று நினைக்கும் இயக்குனர்கள் முதலில் எழுத்தாளர்களுடனான சகவாசத்தை கைவிட வேண்டும். ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன் இருவரது பங்களிப்பும் ஒருபோதும் ஒரு நல்ல படத்தை தமிழ் சமுகத்திற்கு கொடுக்கப்போவதில்லை. நல்ல படத்தை உருவாக்க இயலாமல் போனதற்கு அவர்கள் மட்டுமே காரணம் அல்ல. தமிழ் சினிமாவின் ஒட்டுமொத்த வியாபார கேந்திரத்தை மாற்றினால் மட்டுமே அது சாத்தியம்.

நாடகக் கலைஞர்களை பின்னணியாக வைத்து, மிக சிறந்த படங்களை உருவாக்க முடியும். அதற்கு நிறைய உழைப்பும், களப்பணியும் செய்தாக வேண்டும். அரவான், காவியத் தலைவன் போன்ற முயற்சிகளை முன்னெடுக்கும் வசந்தபாலன் போன்றவர்களால், அவர்களுக்கு மட்டுமே பிரச்சினையல்ல. அவர்கள் அடுத்த சில பல ஆண்டுகள் இதே கதைக்களத்தில் திரைப்படங்கள் வெளியாவதை தடுக்கவும் செய்கிறார்கள். ஒரு பீரியட் படம் என்றால், என்ன என்ன முக்கியமான விசயங்களை கவனிக்க வேண்டும் என்கிற அறிவுகூட இவர்களுக்குத் இல்லாமல் இருக்கிறது.

இதையெல்லாம் தாண்டி, நல்ல முயற்சி, நிறைய சிரமப்பட்டிருக்கிறார்கள் என்கிற மோசமான வாசகங்களை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருப்பதே தமிழ் சமுகத்தின் சாபக் கேடுதான். யாருக்கு வேண்டும் இந்த அரை வேக்காட்டுத் தனமான முயற்சி. அடுத்த சில பல ஆண்டுகளுக்கு வேறு யாரையும் இப்படி ஒரு முயற்சி செய்ய விடாமல் தடுத்தது மட்டும்தான் இந்த படத்தின் சாதனை.

- தமிழ் ஸ்டுடியோஸ் அருண்

# இது "நல்ல" வாழைப்பழமல்ல!



**மு**ன்பெல்லாம் டாக்டர்கள் தினமும் ஒரு வாழைப்பழமாவது சாப்பிடுங்கள், உடம்புக்கு மிக நல்லது என்பார்கள். ஆனால் தற்போது மரபணு மாற்று பெரிய மஞ்சள் வாழைப்பழத்தை சாப்பிடவே வேண்டாம் என்று எச்சரிக்கிறார்கள்.

காரணம் தற்போது பெரும்பாலானோர் உடலில் - தொண்டையில் அலர்ஜி, சைனஸ், தும்மல், வயிற்றுக் கோளாறு, வயிற்றுவலி, சிறுநீரகக் கற்கள், அடிக்கடி தலைவலி... என்று கடுமையாக அவதிப்படுகிறார்கள். இவர்களை நோயாளிகளாக மாற்றியது இந்த மரபணு மாற்று மஞ்சள் வாழைப்பழங்கள்தான்.

இயற்கையான வாழைப்பழம் பழுத்தால் இரண்டொரு நாளில் அழுகிவிடும். இயற்கையான வாழைப்பழங்கள் மணமாகவும், நல்ல ருசியாகவும் இருக்கும். உடம்புக்கு சத்தாகவும், மற்ற உணவை செரிமானமாக்கவும் பயன்படும். மலச்சிக்கலால் அவதிப்படுவோரும் தினமும் இரவில் வாழைப்பழம் சாப்பிடுவார்கள்.

இந்த இயற்கையான வாழை ரகங்களில் நோய் தொற்று ஏற்படும். பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தி நோயை கட்டுப்படுத்துவார்கள். ஆனால் பூச்சி கொல்லிகளை அடிப்பதற்குப் பதிலாக, பூச்சிகளை கொல்லும் விஷச்சத்தை வாழை மரத்தின் மரபணுவில் செலுத்தி அமெரிக்க விஞ்ஞானி கள் வெற்றி கண்டுள்ளனர்.

இப்பழங்களில் விஷத்தன்மை மிக அதிகமாக இருப்பதால் அமெரிக்காவில் இந்த வாழைப்பழத்தை பயிரிடவோ, விற்கவோ தடைவிதிக்கப் பட்டுள்ளது.

மாதக்கணக்கில் வைத்திருந்து விற்றாலும் கெட்டுப்போகாது என்ற ஆசை வார்த்தை கூறி வியாபாரிகள் இந்த மரபணு மாற்று வாழைப்பழத்தை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வாழைப்பழம் ருசியாக இருக்காது. செயற்கையாக மலட்டுத் தன்மை ஆக்கப்பட்ட இந்த வகையான மரபணு மாற்று காய்கறிகள், பழங்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் மலட்டுத்தன்மை ஏற்படுவதோடு, கான்சர், சமிபாட்டு கோளாறு, தோல்நோய், சிறுநீரக நோய்கள், அலர்ஜி போன்றவை உண்டாக்கும்.

# பயனளிக்கும் வினாகிரி

• ஒரு கப் தண்ணீரில் ஒரு கரண்டி வினாகிரி கலந்து .'.ப்ரிட்ஜைத் துடைத்தால் வாடை நீங்கி கறைகள் நீங்கி .'.ப்ரிட்ஜ் பளிச்சென்று ஆகிவிடும்.

• வெற்றிலைக்கறை துணியில் பட்டால் அந்த இடத்தில் வினாகிரியை ஊற்றித் தேய்த்துக் கழுவினால் கறை மறைந்துவிடும்.

• அலுமினிய குக்கரின் உட்புறம் கறுப்பாக இருந்தால் சிறிது வினாகிரியைத் தடவி 15 நிமிடங்கள் கழித்து சிறிது நீர் ஊற்றிக் கொதிக்கவிட்டால் கறை நீங்கி குக்கர் பளிச்சிடும்.

• வினாகிரியுடன் சோக் (வெண்கட்டி) பவுடரைக் கலந்து பூசி வோஷ்பேசினைக் கழுவி னால் கறை நீங்கி வோஷ்பேசின் பளிச்சிடும்.

• சமையலறை அலுமாரியின் தட்டுக்களை வாரம் இருமுறை வினாகிரி கலந்த நீரால் துடைத்து வந்தால் பூச்சித் தொல்லைகள் இருக்காது.

• பாத்திரங்களிலுள்ள ஸ்க்ரு துருப்பிடித்துக் கொண்டால் வினா கிரியை இரண்டு சொட்டு விட்டு சிறிது நேரம் கழித்து திருகினால் ஸ்க்ருவை சுலபமாக எடுக்க முடியும்.




• வினாகிரி கலந்த நீரில் பாதங்கள் மூழ்கும்வரை அரைமணி நேரம் வைத்திருந்து பிறகு கழுவினால் கால்விரல் களில் உள்ள நகங்களில் மறைந்திருக்கும் அழுக்கு வெளியேறி நகங்கள் சுத்தமாகிவிடும்.

• எவர்சில்வர் பாத்திரங்கள், காஸ் அடுப்பு, குளியலறையில் உள்ள மாபிள் கறை, கண்ணாடிப் பாத்திரங்கள், பீங்கான் பாத்திரங்கள் இவற்றை வினா கிரியால் சுலபமாக சுத்தம் செய்துவிடலாம்.

# பத்திரிகையில் அறிக்கை விடுப்பதை தவிர்த்து ஒதுக்கிய நிதியை செலவு செய்யுங்கள்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



மக்களின் நலனில், முன்னேற்றத்தில் அக்கறையிருப்பின் பத்திரிகைகளில் அறிக்கைகள் விடுப்பதை விடுத்து ஒதுக்கிய நிதியை செலவு செய்வதற்காக வடக்கு மாகாண சபை செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தட்டுவன்கொட்டி கிராமத்திற்கு 182இலட்சம் ரூபா செலவில் மின்சார விநியோக பணிகளை ஆரமபித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் கீழ் 32 ஆயிரம் ஆளணி வளம், பல திணைக்களங்கள், பல அலுவலகங்கள், பல பதவி நிலைகள் இருந்தும் என்ன பயன்? அரசினால் மக்களின் அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட நிதியை அந்த மக்களுக்காக பயன்படுத்த முடியாத நிலைமையே காணப்படுகிறது. வடக்கு மாகாண சபையின் அரசியல் தலைமைத்துவத்தை எடுத்தவர்கள் தங்களுக்கு கீழ் உள்ளவர்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்காமல் செயற்றிறனற்று இருப்பதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனத்தெரிவித்தார்.

இவ்வாறு அரசியல் தலைமைகளின் செயற்றிறனற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட தேவைகளோடு உள்ள மக்களின் முன்னேற்றத்தையே பாதிக்கிறது. இது மக்களின் தெரிவுகளால் ஏற்பட்ட விளைவே.

மேலும் தட்டுவன்கொட்டியில் மக்களை மீள்குடியேற்றிய போது எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையே காணப்பட்டது. ஆனால் இன்று நிலைமை வேறு நல்ல கட்டடங்களுடன் பாடசாலை, பொதுநோக்கு மண்டபம், தற்போது மின்சாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் காணப்படுகிறது. நாம் மக்களை தேடிச் சென்று அவர்களின் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றி வருகின்றோம். சிலர் தேர்தல் காலங்களில் மட்டும் வந்து உணர்ச்சி வார்த்தைகளைப் பேசி மக்களிடமிருந்து வாக்குகளை அபகரித்து சென்றுவிடுவார்கள். பின்னர் அவர்களை அடுத்த தேர்தலில் தான் காணமுடியும் எனக்குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர வை.தவநாதன், கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன், பாடசாலை அதிபர் கருணானந்தம், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் அருமைராசா, அதன் பொது முகாமையாளர் புவனேஸ்வரன், மற்றும் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆறுமுக நாவலர் குருபூசை தினம் போட்டி முடிவுகள் வருமாறு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு சைவபரிபாலன சபையினர் நடாத்திய பேச்சு, கட்டுரைப் போட்டிக்கான முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**பேச்சுப்போட்டி, கீழ்ப்பிரிவு,**

மு.நிவேதனா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.அபியுகா (கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்), ச.தர்சனா (யா/யாழ்ப்பாணக் கல்லூரி),

**மத்தியபிரிவு,**

யே.ஷயானா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.வினோதினி (யா/வட்டு மத்தியகல்லூரி), ந.கோபிகா (யா/கனகரத்தினம் மத்திய மாவித்தியாலயம்),

**மேற்பிரிவு,**

க.நிருபன், (மு/மாங்குளம் மத்திய மகாவித்தியாலயம்), ப.தர்சனன் (யா/இந்துக்கல்லூரி), ச.காயத்திரி (யா/இந்து மகளிர் கல்லூரி),

**மேற்பிரிவு - கட்டுரைப்போட்டி,**

தி.தினுசிகா (யா/யூனியன் கல்லூரி), கு.மதிவதனா (யா/இந்து மகளிர் கல்லூரி), க.ஜெயறூபன் (யா/மானிப்பாய் இந்து கல்லூரி),

**ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம் - 2014,**

**பேச்சுப்போட்டி - கீழ்ப்பிரிவு,**

நி.நிருபா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீ.வேணுஜா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை),

**மத்திய பிரிவு,**

சி.பிரதீபன் (யா/வண.நாவலர் மகா வித்தியாலயம்), ஜெ.யதுர்சனா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை),

**மேற்பிரிவு,**

கு.ஜெயாழினி (வ/ஓமந்தை மத்திய கல்லூரி), செ.வைதாரணி (யா/அருணோதயாக் கல்லூரி),

**மேற்பிரிவு**

**கட்டுரைப்போட்டி,**


த.தர்சிகா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), வி.சாரங்கன் (யா/இந்துக் கல்லூரி),

# ஒளிவிழாவும் பிரியாவிடை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பிஸ்னஸ் கல்லூரியின் ஒளிவிழாவும் பிரியாவிடை வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நிதி முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரதிராணி யோகேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார்.





**வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (40)**

# இலவச கலை வகுப்புக்கள்

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தினால் இலவச கலை வகுப்புக்கள் பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவருகின்றன.

கடந்த புதன்கிழமை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் வகுப்புக்கள் காரைநகர் புதுறோட்டிலுள்ள கலாமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும் கலாமன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலும் வகுப்புக்கள் காலை 9 மணிமுதல் 4 மணிவரை இடம் பெறறுவருவதாகவும், இக்காலப்பகுதியில் மாணவர்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிரு தங்கம், வயலின், சித்திரம், நாடகமும் அரங்கியலும், யோகாசனமும் தியானமும், கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் செய்தல் போன்ற வகுப்புக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இவ்வகுப்புக்களை சிறப்பான முறையில் நிறைவு செய்யும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கலாமன்றத்தினால் யாழ்ப்பாணத்திலும் வகுப்புக்கள் நடைபெற்று வருவதாகவும் யாழ்ப்பாண மாணவர்களுக்கான அனுமதிக்கான நேர்முகத் தேர்வு கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மாலை 5 மணிமுதல் 6 மணிவரை திங்கள் தொடக்கம் வெள்ளிவரை நடைபெறவுள்ளது.

இவ்வகுப்புக்கள் இல. 11 கஸ்தூரியார் ஒழுங்கை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறவுள்ளதுடன் இதில் அறநெறி, பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், நாடகமும் அரங்கியலும், போன்ற கலை வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

# சமூக சேவைகள் திணைக்களத்தால் பின்தங்கிய குடும்பங்களுக்கு உதவிகள்

(கரணவாய்)

வடக்குமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நோயாளிகள் ஆகியோருக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுக்கு இந்த வருடத்தில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அடுத்த வருடமும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு தகுதியானவர்கள் உதவிகளை பெற விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், அங்கவீனமுற்றவர்கள் நோயாளிகள், அநாதைகள் ஆகியோருக்கும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மேற்கூறப்பட்டவர்களுக்கு தங்கியிருப்போரின் எண்ணிக்கைக்கேற்ப 250 ரூபாவிலிருந்து 500 வரை வழங்கப்படுகின்றது.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 2014இல் புதிதாக 410 பேருக்கு வழங்கப்பட்டது. இக் கொடுப்பனவு 2000 பேருக்கு வழங்கப்படுகின்றது.

இக் கொடுப்பனவை பெறத்தகுதியானவர்கள் கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

பொதுசன மாதாந்த உதவி அல்லது சமுர்த்தி பெறும் 1943.12.31 அன்று பிறந்து 70 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இக் கொடுப்பனவு 1170 பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.

பொதுசன மாதாந்த உதவி பெறும் பயனாளிகள் சுயதொழிலை மேற்கொள்ள நன்கொடையாக 15000 வழங்கப்படுகின்றது. இதில் கோழி வளர்ப்பு ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு வியாபாரம் என்பவற்றை மேற்கொண்டுவரும் 10 பேருக்கு இவ்வாண்டு வழங்கப்பட்டது.

இக்கொடுப்பனவை பெற கிராம அலுவலர் உறுதிப்படுத்தலுடன் சமூக சேவைப்பகுதியில் நேரடியாக விண்ணப்பிக்க முடியும்.

யுனிசெவ் நிதி உதவித்திட்டத்தின் கீழ் மிகவும் வறுமைப்பட்ட 5 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, வியாபாரம், கோழி வளர்ப்பு என்பவற்றுக்கு ஒரு பயனாளிக்கு 36000 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (18)

# உண்மையான கருத்துக்களை வெளியிடுகிறது தினமுரசு

## அன்ரனி ஜெயநாதன் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் நான் தெரிவித்த உண்மையான கருத்துக்களை தினமுரசு தவிர்ந்த வேறு எந்த ஊடகங்களும் வெளியிட வில்லை அவை எல்லாம் பக்கச் சார்பாகவே நடக் கின்றன. ஒரு அமைச்சர் தொலைபேசியில் அந்தச் செய்தியை வெளியிடவேண்டாம் என்றால் அச் செய்தி வெளிவராது இதுவா பத்திரிகை தர்மம்? என ஊட கங்களை சாடினார் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன்.

கடந்த வியாழக்கிழமை வடமாகாணசபையில் எதிர்க்கட்சித்தலைவரினால் கொண்டு வரப்பட்ட சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரேரணைக்கு வலுச் சேர்க்கும் வகையில் அன்ரனி ஜெயநாதன் அவை யில் பத்திரிகைகளின் பக்கச்சார்பான செய்தி தொடர்பில் காரசாரமாக சாடினார்.

பத்திகைகள் சுதந்திரமாக செயற்படவேண்டும். ஆனால் வியாபாரத்திற்காக மாகாணசபை உறுப்பி னர்களை பற்றி செய்திகளை வெளியிடு வது தவறான செயல் இது எல்லோரையும் பாதிக் கக் கூடியது. மண்சரிவின் போது என்னைப்பற்றி உதயன் பத்திரிகையில் வந்த செய்தி தவறு என தெரிவித்தபோதும் அந்தப்பத்திரிகை அது குறித்து வருத்தம் தெரிவிக்கவில்லை ஆனால் பிரதி அவைத் தலைவருக்கு உதயன் பத்திரிகையில் காய்ச்சல் என போட்டுள்ளார்கள் பொய்த்தகவலை வெளியிடுகிறார்கள் அவற்றை திருத்தாது மீண் டும் தவறிழைக்கிறார்கள். இத்தகைய தவறான செய்திகளை நீங்கள் அனுமதித்தால். அது சிக்க லான சூழ்நிலையில்தான் போய் முடியும். நாங்கள் நல்லவிடயங்களை பேசுகிறோம். அவற்றை பிர சுரிக்காது வியாபார நோக்குடன் தான் செய்தி வெளியிடுகிறார்கள்.

நான் உண்மையை பேசினாலும் அதை அவர்கள் போடுவதில்லை என்ன காசு கொடுக்க வேண்டுமா,

மக்களிடம் உண்மைகொண்டு செல்லப்படுவ துடன் தைரியமாகவும் செயற்படவேண்டும் தொலை பேசியில் அமைச்சர் ஒருவர் செய்தியை வெளியிட வேண்டாம் என சொன்னால் செய்தி வெளிவராது இவ்வாறான ஊடகம் எமக்கு தேவைதானா? எனது குரலில் செய்தியாளர் களுக்கு தெரிவித்த கருத்து உண்மையானது அதை தினமுரசு தவிர வேறு எவரும் வெளியிடவில்லை.

ஊடகவியலாளர்கள் சந்திப்பு என்றால் வருகி றார்கள் முன்னுக்கு இருக்கிறார்கள் தேனீர் குடிக் கிறார்கள், வடை சாப்பிடுகிறார்கள் ஆனால் செய்தி களை போட பயப்படுகிறார்கள். இது ஒரு பக் கச்சார்பு பக்கச்சார்பான செய்திகள் எமக்குத்தேவை யில்லை. வியாபாரத்திற்காக செய்திகளை வெளி யிடுவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். வியாபாரத்திற்காக செய்தி வெளியிடுவது ஒரு பத்திரிகைப் பயங்கரவாதம் என சொல்லலாம். இவை பத்திரிகைகள் அல்ல.

கௌரவ மாகாணசபை உறுப்பினர்களைப் பற்றி, முதலமைச்சரைப்பற்றி யாரைப்பற்றியும் உண்மைகளைவெளியிடுங்கள் பொய்போடத்தேவை யில்லை யாருக்கும் வக்காளத்து வாங்கக் கூடாது.

எமது சிறப்புரிமையை மீறும் வகையில் குறிப் பாக பெயர் சொல்லக்கூடிய சில பத்திரிகை களுக்கு எதிராக நாம் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டி ஏற்படும்.

முதலமைச்சரைப் பற்றி தவறாக முன்னர் போட்டவர்கள் இப்போது பாராட்டி போடுகிறார்கள். இங்கு பேசப்படுகின்ற விடயங்களை சரியாக வெளியிட வேண்டும் திரித்து போடுவதை வன்மை யாக எதிர்ப்பதாக அவர் சாடினார். (இ)

## யாழில் மூவருக்கு சனிக்கிழமை அதிர்ஷ்டம்

(திருநெல்வேலி)

கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட பவர்லொட்டோ சீட்டிழுப்பில் யாழ்ப் பாணத்தில் மூன்று அதிர்ஷ்டசாலிகளுக்கு பணப்பரிசு கிடைக்கப்பெற்றுள்ளது.

இருவருக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாவும், மற்றொருவருக்கு ஐயாயிரம் ரூபாவும் பணப்பரிசா கக் கிடைத்துள்ளது.

இந்த மூன்று அதிர்ஷ்டச் சீட்டுக்களையும் யாழ்ப் பாணம் வைரவர் கோவிலுக்கு அருகாமையில் லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யும் திருமதி க. திலகவதியிடம் இவ்வதிர்ஷ்டசாலிகள் பெற்றுக் கொண்டனர். சில நாட்களுக்கு முன்னரும் இச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் முகவரிடம் அதிர்ஷ் டச் சீட்டுக்களைப் பெற்றவர்களுக்குப் பணப்பரிசு கள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(137)




பாலர் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் பத்து பாலர் பாடசாலைகள் இணைந்து அண்மையில் நடாத்திய கலை விழாவில் சிறார்களின் கலை நிகழ்வைக் காணலாம். (48)

## முதுமானி கற்கை நெறி 11ஆவது பிரிவு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமானி கற்கைநெறியின் 11ஆவது பிரிவு கற்கை நெறி இன்று ஆரம்பமாகின்றது.

உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

புதிய கல்வியாண்டில் கல்வி முதுமானி கற்கை நெறிக்கு (Master of education) 103 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

சனி, ஞாயிறு தினங்களில் கற்கை நெறி பூரணமாக இடம் பெறும் கல்வி முதுமானி கற்கை நெறியின் தலைவராக கலாநிதி திருமதி அனுசியா சத்திய சீலன் கடந்த 3ஆண்டு காலமாக செய லாற்றி வருகின்றார். இதன் இணைப்பாளராக கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் பணிபுரிந்து வருகின்றார்.

இதேவேளை 10ஆவது பிரிவு கல்விமுதுமானி மாணவர்களின் கற்கை நெறி இந்த மாதம் 22ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.(92)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாண்ம்)

யாழ். சர்வதேச மார்க்சீச குழுவின் ஏற்பாட்டில் முற்கற் பிதங்களுக்கு அப்பால் ஜனா திபதித் தேர்தல் 2015 என்னும் விடயம் பற்றிய கலந்துரையா டல் டி.எம்.ஐ.தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சொ. சிவ பாலன் உரையாற்றவுள்ளார்.

## பதிவிறக்கப் பெட்டகம்

ஒரு சாமியாரும் ஒரு பேருந்து ஓட்டுநரும் ஒரே சமயத்தில் இறந்து மேலுலகம் சென்றனர். எமதர்மனை சந்தித்தனர். இருவரும சொர்க்கத்துக்குப் போக விருப்பம் தெரிவித்தனர். உடனே எமதர் மன், பேருந்து ஓட்டுநரை சொர்க்கத்துக்குப் போகச் சொல்லி விட்டார். சாமியாரை நிறுத்தி வைத்துவிட்டார். "நீங்கள் சொர்க கத்துக்குப் போக இன்னும் இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும்" என்றார் எமதர்மன்.

உடனே சாமியார், "இதென்ன அநீதி? நான் இறைவனின் பெருமையை என் வாழ்நாளில் பல்லாயிரக்கணக்கான மக்க ளிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனக்கு உடனே சொர்க்க மில்லையா? அந்த சாரதி அப்படியென்ன செய்துவிட்டார்?" என்று கோபத்துடன் கேட்டார்.

அதற்கு எமதர்மன் சொன்னார்: "நீங்கள் மக்களிடம் இறை வனைப் பற்றிப் பேசிய போது நிறையப் பேர் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். ஆனால் ஓட்டுநர் வண்டியை ஓட்டும்போது அவர் போகிற வேகத்தைப் பார்த்து ஏராளமான மக்கள் பயந்து நடுங்கி கடவுளை வணங்கினார்கள். அதுதான் அவருக்கு உடனே சொர்க்கம்"

*** *** *** ***

ஒரு காட்டில் சிங்கத்துக்குத் திருமணம். மற்ற எல்லா மிருகங்களும் கொஞ்சம் தள்ளி நின்று பார்த்துக் கொண்டு இருந்தன. தூரத்தில் நின்று வாழ்த்துச் சொல்லின. ஆனால் ஓர் எலி மட்டும் சிங்கத்தின் பக்கத்தில் வந்து கை நீட்டி வாழ்த் துச் சொன்னது. சிங்கத்துக்கோ கோபம்.

"என்ன தைரியம் இருந்தால் என் பக்கத்தில் வந்து வாழ்த் துச் சொல்வாய்?" என்று கேட்டது.

அதற்கு எலி சொன்னது: "கல்யாணத்துக்கு முன்னாடி நானும் சிங்கம்தான்டா"

*** *** *** ***

மருத்துவர் ஒருவர் தன் நோயாளியிடம் உண்மை சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டதை உணர்ந்தார்.

"உங்களது இறுதிக் காலம் நெருங்கி விட்டது. யாரையே னும் பார்க்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

நோயாளி மெல்லிய குரலில், "ஆம்" என்றார்.

"யாரை?"

"வேறொரு மருத்துவரை"

*** *** *** ***

பெரியவர் ஒருவர், ஒரு இளைஞனிடம், 'தம்பி... நீங்கள் என்னமோ ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறதாய் என் மகன் சொன்னான்.. என்ன ஆராய்ச்சி செய்துகொண்டிருக் கிறீங்கள்?' என்று கேட்டார்.

'சுவருக்கு, அந்தப் பக்கம் என்ன இருக்கு, என்ன நடக்குது என்று வெட்ட வெளிச்சமா காட்டுகிற, ஒரு சாதனத்தை உருவாக் கிக் கொண்டிருக்கிறேன்...' என்றான் இளைஞன்.

'அதைத்தான் கன காலத்துக்கு முந்தியே கண்டுபிடிச்சிட் டாங்களே! அதுக்குப் பேர்தானே, ஜன்னல்...' என்றார் பெரிசு.

*** *** *** ***

போர் நடந்து முடிந்தது. அதற்குப் பின்பு நடந்த அரசவைக் கூட்டம். எதிரிகளைப் போரின் போது எப்படித் தோற்கடித்தோம் என்று மன்னனிடம் வீரர்கள் விளக்கிக் கொண்டிருந்தனர். எல்லாரும் தத்தமது வீரச் செயல்களைச் சொல்லிக் கொண்டி ருந்தனர்.

அப்போது ஒரு வீரன் சொன்னான்: "மன்னா போர் நடக்கும் போது, நான் எதிரிப் படையின் தளபதியின் காலை வெட்டினேன்"

எல்லாருக்கும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டது.

**மன்னன் கேட்டார்:** "ஏன் காலை வெட்டினாய்? தலையை வெட்டியிருக்கலாமே?"

"அதுவா மன்னா... எனக்கு முன்பே யாரோ தலையை வெட்டிச் சென்றுவிட்டார்கள்"

*** *** *** ***

பெர்னாட் ஷோவின் நாடகத்தில் வரும் காட்சி ஒன்று:

ஒரு முதலாளியும், கொள்ளைக்காரன் ஒருவனும் சந்தித் துக் கொள்கின்றனர்.

முதலாளி கொள்ளைக்காரனைப் பார்த்து, "தாங்கள் யார்?" என்று கேட்கிறார்.

கொள்ளைக்காரன், "நான் ஒரு கொள்ளைக்காரன், நான் பணக்காரர்களிடம் கொள்ளையடித்து வாழ்கிறேன். ஆமாம், தாங்கள் யாரென்று அறிந்து கொள்ளலாமா?" என்கிறான்.

அதற்கு முதலாளி, "நான் ஒரு முதலாளி. ஏழைகளைக் கொள் ளையடித்து பணக்காரனாக வாழ்ந்து கொண்டிருக்கி றேன்".

# ஹக்கீமின் கையில் கடிவாளம்
# இனி முடிவு செய்வது அவர் தான்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் இப்போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீமுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முஸிலிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், உயர் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தாருஸ்ஸலாம் கட்சி தலைமையகத்தில் கூடி பேச்சுவார்த்தை நடாத்திய பின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது தொடர்பான உறுதி மொழியை முஸ்லிம் தலைவர்கள் முன்னிலையில் உறுப்பினர்கள் 'வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் எதிர்வரும் நாட்களில் கட்சியின் இறுதி முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 9 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவை எடுக்க முடியாமல் போனதாக தெரியவருகிறது.

கட்சியில் பிரதான இரு வேட்பாளர்களுக்கும் ஆதரவு தெரிவிக்கும் நபர்கள் இருப்பதால் முடிவெடுக்க முடியாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உள்ளிருந்தே கிளம்புகிறது கண்டனம்
# ஹக்கீமுக்கு இப்போது தலைவலி
## உலமா சபைத்தலைவர் போர்க்கொடி



(கொழும்பு)

சுயநல தலைமைக்கு கட்டுப்பட வேண்டும். என்பதற்கு உலமாக்களை அழைத்து அவர்கள் முன் உறுதி எடுத்ததன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் காரர்கள் மீது அத்தலைமைக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகியுள்ளது. மக்களை ஏமாற்ற உலமாக்களை அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றமை கண்டிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு உலமா சபைத்தலைவர் முபாறக் மஜீத் அப்துல் மௌலவி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அரசுக்கு ஆதரவளிப்பதில்லை' என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மற்றும் அவரது வேட்பாளர்கள் இதே உலமாக்கள் முன்பாக "பை - அத்" உறுதிப் பிரமாணம் செய்தனர். கடைசியில் தலைவரும் வேட்பாளர்களும் தமது "பைஅத்துக்கு" முரணாக நடந்து கொண்டனர். இதனை "பைஅத்" எடுக்க உதவிய உலமாக்கள்கூட கண்டிக்காமல் கோழைகளாக இருந்தனர். "பைஅத்துக்கு" மாறு செய்பவர்கள் இறைவனுக்கே மாறு செய்தவராவர் என்பதை முஸ்லிம் காங்கிரஸும் உலமாக்களும் மறந்து விட்டனர்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸுக்குள் சுயநலனின் அடிப்படையில் பலத்த கருத்து வேறுபாடுகள் காணப்படுவதாலும் கிழக்கு முஸ்லிம்கள், முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து வெளியேறி சுயமாக சிந்திப்பதாலும் பதவிகளில் மட்டுமே உறுதி கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவதுடன் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் மு.கா.வின் தலைமை தன்னிஷ்டப்படியான தீர்வை மேற்கொள்வதற்கு ஏதுவாக உலமாக்களை பாவித்து முஸ்லிம்களை ஏமாற்ற முனைந்துள்ளமை கண்டிப்புக்குரியதாகும். முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் முஸ்லிம்களை ஏமாற்றி வருகிறது. என்று நன்கு தெரிந்தும் அதன் ஏமாற்றுவித்தைகளுக்கு உலமாக்களும் பலியாகின்றமை கவலை தருகின்ற செய்தியாகும்.

கடந்த காலங்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இவ்வாறு பல தடவைகள் தனது சுயநலத்துக்காக உலமாக்களை பாவித்துள்ளமையை வரலாறு அறியும். ஆகவே முஸ்லிம் காங்கிரஸில் உள்ளவர்கள் தலை முதல் கால் வரை சுயநலவாதிகளாக இருப்பதால் இப்போது அவர்கள் எந்த முடிவை எடுத்தாலும் அதில் பிளவு வரும் என்பதால் ஆளை ஆள் குற்றம்சாட்டி தப்புவதற்காக உலமாக்களை அரணாகப் பாவித்துள்ளமையை உலமா கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்றார்.

# தெறிக்கும் உள்ளக உறவுகள்
# சிக்கித்தவிக்கிறது இ.தொ.கா.

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்குள் இப்போது முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பிலான குழப்ப நிலைமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவளிப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் அறிவித்துள்ளார். எனினும்,இந்த தீர்மானத்திற்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் இணங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கட்சியின் ஊவா மற்றும் மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் முடக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஒரு தரப்பினர் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வலுவடையும் வர்த்தக உறவு
# வியட்நாம் தூதுக்குழு கொழும்பில்

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் இருதரப்பு வர்த்தக உறவுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நோக்குடன் வியட்னாமின் தூதுக் குழுவொன்று தற்பொழுது கொழும்புக்கு விஜயம் செய்துள்ளது இந்த தூதுக்குழுவினருக்கும், இலங்கை வர்த்தக சமூகத்தினருக்கும் இடையில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இலங்கை வர்த்தக மன்றம் இதனை ஏற்பாடு செய்தது. இலங்கை நான்கு கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை வருடாந்தம் வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

17 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இரு நாட்டுக்கும் இடையிலான வர்த்தக இடைவெளி இலங்கைக்கு நன்மை பயக்கும் வகையில் எதிர்காலத்தில் குறைத்துக் கொள்ளப்படும்

வியட்நாம் கைத்தொழில் வாணிப அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் இக் குழுவுக்கு தலைமை தாங்குகின்றார். இலங்கை வர்த்தக சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி மங்கள யாப்பா, இலங்கையில் உள்ள வியட்நாம் தூதுவர் பான் கியுது ஆகியோரும் பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# கரவெட்டி பிரதேச சபையின் தலைவர் - செயலாளருக்கு தெரியாதா?

## கம்பர்மலை பாரதி ச.ச.நி வீதி

கம்பர்மலை - பாரதி சனசமூக நிலைய வீதி கரவெட்டி பிரதேச சபைக்கு சொந்தமானதாகும்.

இவ் வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைபின்றி உள்ளது.

மேற்படி பாரதி சனசமூக நிலைய வீதியானது, வல்வெட்டி பிரதான வீதியில் இருந்து ஆரம்பித்து - வேலகாட்டு சந்திவரை செல்லும் முக்கிய வீதியாகும்.

இவ் வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவிற்கு கல்லுகள் வெளிக்கிளம்பியும், வீதி பிளவுபட்டும், குன்றுகளும் குழிகளுமாக காணப்படுகின்றன.

இவ் வீதிப் புனரமைப்பு குறித்து இதுவரை 10 இற்கும் மேற்பட்ட மகஜர்கள், 5 இற்கும் மேற்பட்ட கடிதங்கள் எனபவற்றை கடந்த 5 ஆண்டு காலத்திற்குள உடுப்பிட்டி வடக்கில் உள்ள பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் என்பனவற்றுடன் இணைந்து வழங்கி விட்டோம்.

மேலும் வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டம் (NELSIP), பின்வந்த புறநெகும (Puraneguma ) மற்றும் பல திட்டங்களில் [சபைநிதி, முன்னிலை அமைச்சு நிதி] சேர்க்குமாறும் பல தடவைகள் கௌரவ கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எனினும் இவ்வீதி மக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட நிலையில் என்ன காரணம்? என்ன நோக்கம்? என்பனவற்றுக்காக பின்தள்ளப்பட்டு வருகின்றது? என்பதற்கு சபையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகஸ்தரான தவிசாளரும் - சபையின் பிரதான நிர்வாக அதிகாரியுமான் செயலாளரும் பதில் சொல்லியாக வேண்டும்.

பாரதி சனசமூக நிலைய வீதி, வல்வெட்டி பிரதான வீதியில் இருந்து (RDA) ஆரம்பித்து ஊரிக்காடு நாவலடிக்கு செல்லும் வேலகாட்டு சந்திவரையான 1.5 கிலோ மீற்றர் நீளம் கொண்டது.

தினமும் 1200 முதல் 2020 இற்கும் மேற்பட்ட உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலை, ஊரிக்காடு - நாவலடி, மயிலியதனை, வேலகாடு, வன்னிச்சியம் மன் மற்றும் ஆதிகோவிலடி மக்கள் பயணிக்கும் வீதியாகும் கரவெட்டி பிரதேச சபைக்கு சொந்தமான இவ்வீதி வழியாக முக்கியமாக விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர்கள், பொறியியலாளர்கள், கௌரவ சபை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோருடன் முதியோர்க ளும் பயணிக்கின்றனர்.

எனவே இவ்வீதியின் புனரமைப்பை ஊடகங்களில் தெரிவித்து தான் மீள்புனரமைப்பு செய்யவேண்டும் என்பதல்ல.

இவ்வாறான வீதிகள் பற்றி மக்களின் வாக்குகேட்டு (Votes) வென்ற வித்துவான்கள் அறியவேண்டும், இவைகளின் வரைபடங்கள், மதிப்பீடுகள் என்பவற்றை வழங்கத் தெரியவேண்டும்.

வீதி வலைப்பின்னலில் (Road netwprk) இது உள்வாங்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மக்கள் பங்கேற்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா எனவும் சபையின் செயலாளர் அறிந்திருக்க வேண்டும்.

இத்தான் மக்கள் பணி என்பதனை இந்த கரவெட்டி பிரதேச சபை உணர வேண்டும்.

இல்லாவிடில் இந்த கௌரவசபை, இதற்கான செயலாளர், அதன் கீழான அலுவலர்கள், அதனிலும் மேலான உப - அலுவலகம் யாவுமே வீணாகும் பூச்சியமும் ஆகும்.

இப்பணிகளை ஆற்றுவதற்காக வழங்கப்படுகின்ற வேதனங்களும் வீண் - ஊக்குவிப்பு படிகளும் வீண்.

எனவே 2014 முடிவடைய இன்னமும் 17 நாட்களே உள்ளன.

2015 மார்ச்சு மாதத்தில் இவ் வீதியை முழுமையாக "காப்பெற்" வீதியாக புனரமைத்து மக்களுக்கு பணிசெய்வதோடு சபையும் வளர வேண்டிக்கொள்கிறேன்.

இதன் ஊடாக மிகுதிவேலைகளை வல்வெட்டித்துறை நகரசபை (UC) ஊரிக்காடு - நாவலடி வீதியின் மிகுதியை மீள் புனரமைத்து ஏழை மக்களின் வாழ்வு செழிக்க உழைக்கும் என்ற எண்ணத்துடன் நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

-உடுப்பிட்டி வடக்கு - -இரா.ரிஷாந்,
நாவலடி.



# ரோசியின் சீற்றம் அமைச்சர் எஸ்.பி.மீது

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க வெளியிட்டுள்ள கருத்தானது நாட்டு பெண்களுக்கு செய்த பாரிய குற்றம் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கருத்தானது குற்றவியல் சட்டத்தின் கீழ்வரும் இழிவுபடுத்தும் குற்றம் எனவும் அவர் கூறியுள்ளார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க என்பவர் கீழே தள்ளி மிதித்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஓடவைக்க வேண்டியவர் என எஸ்.பி. திஸாநயக்க கூறியுள்ளதாகவும் நாட்டின் உயர் கல்வி அமைச்சரான அவர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து மிகவும் அருவருப்பானது எனவும் ரோசி சேனாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு இப்படி கூறினால், நாட்டில் வாழும் சாதாரண மக்கள் மற்றும் பெண்களின் நிலைமை என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அமைச்சரது கருத்து மூலம் அவர் குற்றம் செய்திருந்தால், அதற்கு எதிராக சந்திரிக்கா பண்டாரநாயக்கவே நடவடிக்கை எடுக்க வேண்டும்.


அவ்வாறான நடவடிக்கையை எடுக்குமாறு தான் அவரிடம் கோரவுள்ளதாகவும் சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார். அத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஜனவரி 9 ஆம் திகதி புதிய தலைமைத்துவத்தின் கீழ் இப்படி பெண்களை நிந்திக்கும் செயல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரோசி சேனாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

18. மாலைக்கண் நோய் ஏற்படக்காரணம்
1. விற்றமின் D குறைபாடு　2. விற்றமின் C குறைபாடு
3. விற்றமின் A குறைபாடு　4. கல்சியம் குறைபாடு

19. மாச்சத்து அதிகம் கொண்ட உணவுவகை எது?
1. பலா வித்து - வற்றாளை　2. மஞ்சள் பூசணி - பருப்பு
3. பருப்பு - உருளைக்கிழங்கு　4. உருளைக்கிழங்கு - பயறு

20. இரவு நேரத்தில் மலரும் பூவகை
1. தாமரை　2. நீலோற்பலம்　3. அந்திமந்தாரை　4. கடுபுல்

(13) கணித வினாக்களுக்கு விடை தருக





01. ABCD யின் சுற்றளவு - 17m ஆகும். BD = AC எனின் CD யின் நீளம் யாது? ..............................

02. 756 அப்பியாசக்கொப்பிகளை ஒரு மாணவருக்கு 7 வீதம் வழங்கினால் ஒருமாணவன் பெற்றுக்கொள்ளும் கொப்பிகளின் எண்ணிக்கை யாது?
..............................


03. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக
0.4 , 0.8, 0.1 ..............................

04. ஒரு கிலோகிராம் பருப்பின் விலை ரூபா 96.00 எனின் 2kg 500g பருப்பின் விலை யாது? ..............................

05. 250ml நீரைக் கொள்ளும் குவளையொன்றினால் 12 தடவை நீர் ஊற்றப்பட்டு ஒரு பாத்திரம் நிரப்பப்பட்டது எனின் அப்பாத்திரத்தின் கொள்ளளவு எத்தனை லீற்றராகும்? ..............................

06. 
இவ் வெட்டுருவை மடித்து உருவாக்கக்கூடிய திண்மத்திற்கு இருக்கக்கூடிய விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................

07. 250g தேயிலையும் 100g பால்மாவையும் வாங்கிக்கொண்டு ரூபா 200ஐ கடைக்காரனுக்கு வழங்கியபோது மீதியாக கிடைத்த ரூபா 55.00 இற்கு மேலும் பால்மா 100g வாங்கப்பட்டதெனின் 250g தேயிலையின் விலை யாது? ..............................

08. 


A யிலிருந்து E இற்கான தூரம் 295km ஆகும்
B யிலிருந்து D இற்கான தூரம் 135km ஆகும்
A யிலிருந்து D இற்கான தூரம் 255km ஆகும் எனின்
A யிலிருந்து B இற்கான தூரம் எத்தனை km?

09. 10091 உடன் எந்த எண்ணை கூட்டும் போது 10100 வரும்? ..............................

10. இவ்வுருவில் $\frac{2}{3}$ பங்கை நிறந்தீட்டிக் காட்டுக
..............................

11. 10099 இவ்வெண்ணை எழுத்தில் எழுதுக ..............................

12. தாயினதும் பிள்ளையினதும் வயதின் கூட்டுத்தொகை 60 ஆகும். தாயின் வயது பிள்ளையின் வயதைப் போல 5 மடங்காகும். எனின் பிள்ளையின் வயது யாது?
..............................

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

(01) பந்தியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

பழமொழிகள் மனிதன் பேச ஆரம்பித்த காலத்தில் இருந்தே மொழிதோன்றிய காலத்தில் இருந்தே உருவாகிவிட்டன. அவை தமிழ்மொழியில் மட்டுமன்றி உலக மொழிகள் அனைத்திலும் காணப்படுகின்றன. பழமொழிகள் என்றால் என்ன? என்பதற்கு அந்தச்சொல்லிலேயே விளக்கம் இருப்பதை நாம் காணலாம். பழையமொழி பழமொழி, பழகிப்போனமொழி, பழக்கத்தில் வந்துவிட்ட மொழி எனக்கூறலாம். அவற்றிக்கு இலக்கணமோ, வரையறையோ கிடையாது. நமது முன்னோர் அனுபவரீதியாக பெற்ற அறிவைக் கொண்டே பழமொழிகளைக் கூறினர். அவை செந்தமிழில் அன்றிக் கொச்சை மொழியிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

01. பந்தி குறிப்பிடும் கருப்பொருள் யாது? ..............................
02. முன்னோர் என்பதனால் கருதப்படும் கருத்து யாது? ..............................
03. செந்தமிழ் என்பதை பிரித்து எழுதுக? ..............................
04. பழமொழிகள் எப்போது தோன்றின? ..............................
05. பழைய எனும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............................
06. அவை எனும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............................
07. அஃறிணை படர்க்கை, நிகழ்கால, பன்மை வினைச்சொல்லை தருக? ..............................

(02) இடைவெளி நிரப்புக
01. விசைப்பலகையானது எழுத்துக்களையும் .............................. குறியீடுகளையும் கொண்டிருக்கும்
02. கணினியில் மையச்செயலகம் மனிதனுடைய ..............................க்கு ஒப்பானதொரு பகுதியாகும்

(03) வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற்குறியீடுகளை இடுக
01. என்ன திட்டம் ஆதவன் ஆவலோடு கேட்டான் ..............................
02. சுத்தம் சுகம் தரும் நலம் தரும் பலம் தரும் போன்ற சொற்றொடர்கள் சுத்தத்தின் முக்கியத்துவத்தை புலப்படுத்துகின்றன ..............................

(04) பின்வரும் பழமொழிகளின் மீதி பகுதியை எழுதுக
01. கீரைக்கடைக்கும் ..............................
02. குற்றமுள்ள நெஞ்சு ..............................

(05) ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக
01. (கூலானாலும், கூளானாலும், கூழானாலும்) .............................. குளித்துக்குடி
02. (ஆழம், ஆலம், ஆளம்) .............................. அறியாமல் காலை விடாதே



(06) கருத்துக்கு பொருத்தமான மரபுத்தொடர்களை எழுதுக
01. வெறுப்பைக்காட்டுதல் ..............................
02. மனம் நோகப் பேசுதல் ..............................


**(07) தனிச்சொல்லை தருக**

01. சுதந்திரம் இன்றி வாழ்பவன் ..............................

02. சிறைதண்டனை பெற்றவன் ..............................

**(08) பின்வரும் உருக்களுக்கு பொருத்தமான ஆங்கில சொல்லை எழுதுக**



01. .................. 02. .................. 03. .................. 04. ..................

**(09) கருத்தினை தமிழில் எழுதுக**

01. Please dont:t come here . ..............................

02. Do you like? ..............................

03. stamp ..............................

**(10) கருத்தினை தமிழில் எழுதுக**

01. சருங்கலாய ..............................

02. அன்ன குருத்துமா யனவா? ..............................

**(11) சிங்களத்தில் எழுதும் முறையை தமிழில் எழுதுக**

01. அண்ணா கடைக்குப் போனார் ..............................

02. நாங்கள் தண்ணீர் குடிப்போம் ..............................

**(12) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

01. 

இது தொழிற்படுவதற்கு அவசியமானது?

1. நீர் 2. காற்று 3. நீராவி 4. மின்சக்தி

02. இலங்கையின் உற்பத்தி பொருட்களுக்கான தரச்சின்னம்

1. SLS 2. ISO 3. ISBN 4. SLS

03. ஒவ்வொருவரது வதிவையும் உறுதிப்படுத்தச் செல்ல வேண்டிய இடம்

1. மாவட்டச் செயலகம் 2. கிராம சேவகர் காரியாலயம்
3. பிரதேச செயலகம் 4. தேர்தல் ஆணையாளர் அலுவலகம்

04. சிறுவர் உரிமை மீறல் சம்பந்தமான தகவல்களை வழங்குவதற்கு பயன்பாட்டில் உள்ள தொலைபேசி இலக்கம்

1. 1919 2. 1929 3. 118 4. 112

05. 


1. நில்வளகங்கை, வளவகங்கை என்பவற்றை குறிக்கும் எழுத்துக்கள் எவை?

1) B.A 2) A.D 3) B.C 4) D.C



06. பின்வருவனவற்றுள் மின்னோட்டம் நடைபெறாத உரு எது?




07. 

இவ் உடுக்கோலமானது

1. இடையன் 2. மகரம் 3. சிம்மம் 4. மிதுனம்

08. வானவில்லின் நிறமாக அமையாதது

1. ஊதா 2. நீலம் 3. பச்சை 4. வெள்ளை

09. டெங்கு நோயின் அறிகுறியாக அமைவது?

1. தொடர்ச்சியான வாந்தி 2. கண்கள் சிவப்பு நிறமடைதல்
3. தோல் மஞ்சள் நிறமடைதல் 4. மூக்கில் சளி வெளியேறுதல்

10. அடர்ந்த காடுகளின் ஊடாக டெங்குநோய் காவியை கொண்டு வரும் நுளம்பு

1. அனோபிலிஸ் நுளம்பு 2. கியூலெக்ஸ் நுளம்பு
3. ஈடிஸ் அல்போபிக்டஸ் 4. ஈஸ்ட் ஈஜிப்டய்

11. பண்டையக்கால தொல்பொருள் பெறுமதிமிக்க இடமாக நிகழ்வது

1. அனுராதபுரம் 2. பொலன்நறுவை 3. தம்புள்ள 4. நித்துல்கவ்வ





12. தனது குட்டிகளை வயிற்றுப் பகுதியில் வைத்து சுமந்துகொண்டு செல்வது?


1. நாய் 2. பூனை 3. அணில் 4. குரங்கு

13. பாதுகாப்பற்ற நேரத்தில் தலையை மண்ணிற்குள் புதைத்து வைப்பதன் ஊடாக தன்னை காத்துக் கொள்ளக்கூடிய பிராணி

1. வான்கோழி 2. ஒட்டகச்சிவிங்கி 3. தீக்கோழி 4. காண்டாமிருகம்

14. ஆணியொன்றை அறைவதற்கும் இறுக்குவதற்கும் பயன்படுத்தக் கூடியது

1) 
2) 
3) 
4) 

15. 

இக்குறியீடு குறிப்பது

1. தொடர்பாடல் 2. சமாதானம்
3. பாதுகாப்பு 4. சரணாலயம்

16. நுகத்தடி பயன்படுத்துவது

1. வனைதற் தொழிலில் 2. கொல்லன்பட்டறையில்
3. கமத்தொழிலில் 4. தச்சுத்தொழிலில்

17. 

இக்குறியீட்டினை காணக்கூடிய பொருள் பைக்கற்று எது?

1. பிஸ்கட் பைக்கற்று 2. அப்பியாசப் புத்தக மேல் அட்டை
4. குளிர்சாதனப்பெட்டி 4. மின்குமிழ் பெட்டி

# லஞ்சம், ஊழல் எதிர்ப்பு தினம் இரு தமிழ் படைப்புக்கள் தெரிவு



லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக சர்வதேச நிறுவனமான பிரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனத்தின் இலஞ்ச எதிர்ப்பு தின நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில். நடைபெற்றது.

இதில் லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் மக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்த இரண்டு தமிழ் படைப்புக்கள் தெரிவாகின.

இது தொடர்பில் பல படைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ். எண்டர்டைமண்ட் நிறுவனத்தின் தயாரிப்பான ஷாலினி சாள்ஸ் இன் கையூட்டும் குறும்படம், ரி.பிரியனின் பாடல் என்பன தெரிவாகியுள்ளதுடன் நிகழ்வில் திரையிடப்பட்டன.

தமிழர்கள் என்ற வகையில் தமது படைப்புக்கள் தெரிவாகி யுள்ளமை குறித்தும் வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்கிய கலைஞர் களுக்கு இரு படைப்பாளிகளும் தமது நன்றியைத் தெரிவித் துள்ளனர். (33)

# ஆத்திசூடி பகுதி மக்களின் பிரச்சினை அமைச்சர் நேரில் சென்று ஆராய்வு



யாழ்ப்பாணம் ஆத்திசூடி பகுதி ஊடாக மீண்டும் நிர்மாணிக்கப் பட்டுள்ள புகையிரத பாதையி னால் போக்குவரத்தை மேற் கொள்வதில் தாம் எதிர்நோக்கி யுள்ள இடர்பாடுகள் தொடர்பில் அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக் கைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

ஆத்திசூடிப்பகுதிக்கு நேற்று முன் தினம் விஜயம் மேற் கொண்ட அமைச்சர் குறித்த விடயம் தொடர்பாக மக்களுடன கலந்துரையாடி கேட்டறிந்தார்.

நாட்டில் நிலவிய அசா தாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்துக்கான புகை யிரத போக்குவரத்து சேவை யும் இடைநிறுத்தப்பட்டிருந்தது.


இந்நிலையில் குறித்த பகுதி யில் புகையிரத பாதைக்கு அண்மையாக மக்கள் எல்லை வேலிகளை அமைத்ததுடன் அங்கிருந்த பாதையூடாக போக்கு வரத்தையும் மேற்கொண்டு வந்தனர்.

மீண்டும் புகையிரத சேவைக்காக திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்புட்டு புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆத்திசூடிப் பகுதியில் மக்களின் போக்கு வரத்துக்கு இடையூறாக குறித்த பகுதியில் வெள்ளநீர் தேங்கி யுளளதாகவும் இதனால் தாம் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் அமைச்சரி டம் சுட்டிக்காட்டினர்.

இதன்போது மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவ னம் செலுத்திய அமைச்சர் மக்கள் தற்போது போக்கு வரத்து மேற்கொள்ளும் பாதை யினை அகலிக்கும் வகையில் தமது காணிகளில் சிறிதளவு பகுதியை பாதைக்காக விட்டுக் கொடுக்க முன்வந்தமைக்கு நன்றி தெரிவித்த அதேவேளை, இலங்கை மின்சார சபையின் மின்கம்பங்களையும் அதற்கேற்ற விதத்தில் இடமாற்றுவதற்கும் புகையிரத திணைக்களத்தால் சிறிய பாதுகாப்பு அணை யொன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென வும் தெரிவித்தார்.

இதனிடையே இவ்விடயம் தொடர்பாக புகையிரத திணைக் களம், இலங்கை மின்சார சபை, யாழ்.மாநகர சபை ஆகியவற் றின் பிரதிநிதிகளுடன் கலந்துரை யாடவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## கால்நூற்றாண்டுக்கான சிறைவாழ்வு இவர் தான் அவர்



குண்டு வெடிப்பின் பின்னர் கைது செய்யப்பட்டு காணாமற்போன சுன் னாகம் வாசி ஒருவர் 25 வருடங்க ளாக சிறையிலிருந்து நேற்று மீண்டும் தனது சொந்த இடத்துக்குத் திரும்பினார்.

சுன்னாகம் பெற்றோல்செற் ஒழுங கையைச் சேர்ந்த எஸ்.வைரவநாதன் (வயது 53) என்பவரே இவ்வாறு மீண்டும் தனது சொந்த இடத்துக்குத் திரும்பியவராவார்.

தொழில் நிமித்தமாக இவர் கொழும்பு சென்றிருந்த போது அங்கு இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து இவர் காணாமற் போயிருந்தார். இவரைத் தேடிய பெற்றோர் முதுமையடைந்த நிலையில் மரணமாகினர். இந்நிலையில் அம்பாந்தோட்டை புனர்வாழ்வு நிலையத்தில் இவர் இருக்கிறார் எனக் கூறி அவரை அழைத்துச் செல்லுமாறு கடிதம் ஒன்று இவரின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் உறவினர்கள் குறித்த நபரை அழைத்து வந்தனர்.

## கட்சிப் பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் பொதுக் கூட்டம் முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

இக்கூட்டம் முல்லைத்தீவு ஐக்கிய மக்கள் சுதந்திர முல்லை மாவட்ட தேர்தல் இணைப் பாளர் அன்ரனி றங்கதுரையின் ஏற்பாட்டில் இடம்பெற்றதுடன் இதில் முல்லைத்தீவு மாவட்டத் தில் உள்ள இளைஞர்களுட னான சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பு நாமல் ராஜ பக்ஷவின் ஏற்பாட்டில் ஜனாதி பதிக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்றுள்ளது. (40)

## சைவ வினாவிடை பரீட்சை வெற்றிபெற்ற மாணவர் விபரம்

சைவசமய அபிவிருத்திக் கழகம் ஆறுமுக நாவலர் குரு பூசைதினத்தை ஒட்டி நடத்தப் பட்ட சைவ வினாவிடைப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

கு.யுகானா (சுன்னாகம் கதிர மலைச்சிவன் அறநெறிப் பாட சாலை), ம.திகழ்ஒளிபவன் (யாழ். இந்து ஆரம்ப பாட சாலை), சி.ஸ்ருதி (கோண்டா வில் கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை).

ச.அபிஷாயினி (கரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), ஜெ.அக்ஷயா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), தி.றஜீவன் (கரைநகர் கிழவன்காடு கலா மன்றம்).

ஸ்ரீ.றமேஸ் (கோண்டாவில் கைலாசநாத வேதசிவாகம அற நெறிப் பாடசாலை), கி.ஆர்த் திகா (காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்), சி.பிரணவன் (யாழ. இந்து ஆரம்ப பாடசாலை).

அ.விசாகன் (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி), ஜெ.புவியரசன் (காரை நகர் கிழவன்காடு கலாமன்றம்), ப.விஷ்ணுஜன் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி).

ம.கிருஷ்ணவி த.கயூரி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சூ.ஆதிரை (மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை).

# 40 வருடமாக புனரமைப்பின்றியுள்ள ஆனைக்கோட்டை நாவலடி வீதி

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக் கோட்டை நாவலடி வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மள்புனரமைப்பு செய்யப்பட விலலை.

இவ்வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு குண்டும் குழியுமாக உள்ளது.

இவ்வீதியை புனரமைத்து தருமாறு ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்தி மற்றும் பொரு ளாதார அபிவிருத்தி கழக தலை வர் இரா. சுதா வலி.தென்மேறகு பிரதேச சபை பதில் தவிசாளர் சி.மகேந்திரனை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

ஆனைக்கோட்டை நாவலடி வீதி புனரமைப்பு இன்றி அழி வடைந்துள்ளது. எனும் தலைப் பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி யாக ஆனைக்கோட்டை நாவலடி வீதி அமைந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் நெல்சிப் புறநெகும திட்டத்தில். இவ்வீதி உள்வாங்கப்படும் என தெரி வித்துசபை மக்களை ஏமாற்றி விட்டது.

தற்போது மக்கள் பங்கேற்பு திட்டத்தில் இவ்வீதி முன்னுரி மைப்படுத்தப்பட்டுள்ளது.

2015 இல் கௌரவ சபையும் செயலாளருமாக இணைந்து இவ்வீதியை உடன் புனரமைத் துத் தரவேண்டும். இதற்கேற்ப 2015 இன் வரவு செலவுத் திட் டத்தில் ஏற்பாடு செய்ய தலை வர், செயலாளர் முன்வரவேண் டும்.

கடந்த 40 ஆண்டுகளாக துன் பங்களை அனுபவித்த எமக்கு 2015 இல் புதிய நாவலடி வீதிக்கு உயிரோட்டம் கொடுத்து மக்கள் இலகுவாக செல்லவும் வீதி விளக்குகள் பொருத்தி தரவும் சபை முன்வரவேண்டும்.

இனிவரும் காலங்களில் நாம் சபைக்கு கடிதங்களை வரைய மாட்டோம். அபிவிருத்தியே இலக்கு எனும் தொனிப்பொரு ளில் 2015 நிகழவுள்ளதால் கூடிய முக்கியத்துவமளித்து ஆனைக் கோட்டை நாவலடி வீதியை மீள்புனரமைத்து தருமாறு தலை வர் இரா.சுதா கோரியுள் ளார். (92)

## கலாபூஷண விருது விழா இன்று கொழும்பில்

நாடு தழுவிய ரீதியில நடைபெறும் 'கலாபூஷணம் விருது' வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

கலாபூஷணம் விருதுக்காக அழைக்கப்பட்டவர்கள் தங்கள் நெருங்கிய உறவினர் இருவர்களை பார்வையாளராக அழைத்து வரலாம்.

இவ்வாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

விருதுக்காக அழைக்கப்பட்டவர்கள் இன்று காலை 8 மணிக்கு தங்களது இருக்கையில் அமர்ந்து கொள்ளவேண்டும்.

மேலதிகமாக தொடர்புகொள்ள வேண்டியிருப்பின் 011-2552642 எனும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளலாம் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (92)





## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்

# தீவிரவாதம் தொடர்பில் பாகிஸ்தானுக்கு வலுவான பதிலடி வழங்க வேண்டும்

## இந்திய இராணுவ அமைச்சர் தெரிவிப்பு


(புதுடில்லி)

தீவிரவாத தாக்குதல்கள் முடிவுக்கு வர வேண்டுமானால், பாகிஸ்தானுக்கு பலத்த அடி கொடுக்க வேண்டும் என இந்திய இராணுவ அமைச்சர் மனோகர் பாரிகர் கூறினார்.

பாகிஸ்தானை தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்ற தீவிரவாதிகள், காஷ்மீரில் தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருகிறார்கள். இதனால் ஏதுமறியாத அப்பாவி பொது மக்களும் களப்பலி ஆகிறார்கள்.

இந்த நிலையில், இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்குள் பாகிஸ்தான் தீவிரவாதிகளை அனுப்பிக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு பலத்த பதிலடி கொடுக்கப்பட வேண்டும் என்பது என் ஆணித்தரமான கருத்து.



எல்லாவற்றையும் முடிவுக்கு கொண்டு வரவேண்டுமானால், கொஞ்சம் வலுவான பதிலடி தந்தே ஆக வேண்டும். அப்போதுதான் அப்பட்டமான தாக்குதல்கள் கொஞ்சம் குறையவாவது செய்யும்.

இராணுவ கொள்முதல் குறித்த புதிய கொள்கையை மத்திய அரசு வகுத்து அளிக்கும். பாதுகாப்பு படைகள் நவீனமயம் என்ற பெயரிலான தந்திர யுக்திகள் பற்றியும் அதில் குறிப்பிடப்படும். லஞ்சத்துக்கு இடம் இருக்காது. இராணுவ தரகர்கள், இடைத்தரகர்களை சட்டபூர்வமாக்குவது குறித்து செயலாற்றி வருகிறோம்' இவ்வாறு அவர் கூறினார்.

# எபோலா தடுப்பு பிரிவுக்கு புதிய தலைவர் நியமனம்

(ஜெனீவா)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஐ.நா. சுகாதார அமைப்பு சார்பில் எபோலா நோய் பரவாமல் தடுக்கும் பணிகளில் மருத்துவ குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். அந்த தடுப்பு பிரிவுக்கு புதிய தலைவராக மொறிஷியஸ் நாட்டை சேர்ந்த இஸ்மாயில் அவுல்ட் ஷெய்க் அகமது நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஐ.நா. தலைவர் பான் கீ மூன் நேற்றுமுன் தினம் அறிவித்தார்.



மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, சியர்ரா லியோன், கினியா, மாலி உள்ளிட்ட 8 நாடுகளில் கடந்த ஆண்டு இறுதி முதல் எபோலா நோய தீவிரமாக பரவி வருகிறது. எபோலாவுக்கு தடுப்பு மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுவரை நோய் தாக்குதலில் 18 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6,400 பேர் பலியாகி உள்ளனர்.

ஐ.நா. சார்பில் கானாவை தலைமையிடமாக கொண்டு செயற்படும் எபோலா தடுப்பு பிரிவுக்கு அமெரிக்காவை சேர்ந்த அந்தோணி பான்பெரி தலைவராக செயற்பட்டு வருகிறார். இந்நிலையில், லிபியாவை தலைமையகமாக கொண்டு செயற்படும் எபோலா அவசர சிகிச்சை திட்டத்துக்கு மொரீயஸ் நாட்டை சேர்ந்த 54 வயதான இஸ்மாயிஸ் அவுல்ட் ெய்க் அகமது புதிய தலைவராக நியமிக்கப்படுகிறார். மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா நோய் தாக்குதலை தடுக்கும் பணியில் இவர்கள் இருவரும் இணைந்து செயற்படுவார்கள் என்று ஐ.நா. அமைப்பின் தலைவர் பான் கீ மூன் அறிவித்தார்.

# கைவிடப்பட்டது யுத்தக்குற்ற விசாரணை

சூடானின் - ட்.பார் பிராந்தியத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டத்தரணி கைவிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு இந்த பிராந்தியத்தில் பாரிய யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றிருந்தன.

இது தொடர்பில் சூடானின் ஜனாதிபதி ஒமர் அல் பசீருக்கு எதிரான விசாரணைகளை, ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டத்தரணி படோ பென்சோடா மேற்கொண்டு வந்தார்.

எனினும் இதற்கு ஐக்கிய நாடுகள் சபையும், பாதுகாப்பு சபையும் சரியான ஒத்துழைப்பை வழங்காத நிலையில், தாம் இந்த விசாரணைகளை கைவிட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை முறையாக செயற்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# அமெரிக்காவில் கனமழை, பனிப்புயல் 1 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு



(சான் பிரான்சிஸ்கோ)

அமெரிக்க மேற்கு கடற்கரை பகுதியைச் சேர்ந்த சுமார் 1,50,000 மக்கள் பனி, கடும் மழை மற்றும் காற்றோடு வீசி வரும் வலுவான புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 'பைனாப்பிள் எக்ஸ்பிரஸ்' என்று அழைக்கப்படும் இந்த புயல் மணிக்கு 230 கிலோமீற்றர் வேகத்தில் கடும் சீற்றத்துடன் வீசி வருகிறது.

கடந்த புதன்கிழமை மாலை மாநிலத்தின் வடக்கு பகுதிகளில் தொடங்கிய இந்தப் புயல் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளம் மற்றும் மண்சரிவின் காரணமாக சான் பிரான்சிஸ்கோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து செல்லும் 240 விமானங்கள் ரத்து செயயப்பட்டதாக உள்ளூர் நாளிதழ் தெரிவித்தது.

கடந்த ஆறு வருடங்கள் இல்லாத அளவுக்கு ஹவாயிலிருந்து அமெரிக்க மேற்கு கடற்கரை நோக்கி பனிக்காற்றோடு வீசும் இந்தப்புயல் இதுவரை இல்லாத அளவுக்கு பெரும் நாசத்தை ஏற்படுத்துமென்றும், மலைப்பகுதிகளில் பனிப்புயல் எச்சரிக்கை அறிவித்துள்ள நிலையில் கடந்த 2008 இற்குப் பிறகு முதன் முறையாக மூன்று மீற்றர் அளவுக்கு பனிப்பொழிவு ஏற்படக்கூடுமென்றும் தேசிய கால நிலைமை அதிகாரி டோட் மோரிஸ் தெரிவித்தார்.

# சீனாவில் முஸ்லிம் பெண்களுக்கு பர்தா அணிய தடை விதிப்பு



சீனாவில் முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தாவுக்கு தடை விதிகப்பட்டுள்ளது. சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் அதிகளவான முஸ்லிம்கள் வசித்து வருகின்றனர்.

இந்த பகுதியை சேர்ந்த உய்குர் இனத்தவருக்கும், சீன ஹன் இனத்தவருக்கும் இடையே நீண்டகாலமாக பதற்றம் நிலவி வருகிறது.

இதனால் நிகழ்ந்த வன்முறை சம்பவங்களுக்கும், பயங்கரவாத தாக்குதல்களுக்கும் இதுவரையிலும் 10இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அந்த பகுதியில் பர்தா அணிந்து வர தடை விதிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர், இதன் மூலம் பயங்கரவாத தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என அவர்கள் கருதுகின்றனர்.

உலகச் செய்திகள்

# இந்தோனேஷியாவில் நிலச்சரிவு 8பேர் பலி; இயல்பு நிலை பாதிப்பு

(ஜகர்த்தா)

இந்தோனேஷியா 17 ஆயிரம் தீவுக்கூட்டங்களை உள்ளடக்கிய நாடு. இங்கு கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் இங்கு வெள்ளப் பெருக்கால் கடும் சேதம் ஏற்பட்டு உள்ளது. நேற்றுமுன்தினம் பெய்த மழைக்கு ஜாவா தீவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



மத்திய ஜாவா மாகாணத்தில் உள்ள பஞ்சனேகரா மாவட்டம் மலைகளால் ஆனது. அங்கு பல இடங்களில் நிலச் சரிவு ஏற்பட்டது. இதனால் 105 வீடுகள் மண்ணில் புதைந்தன.

உடனே இராணுவவீரர்கள், பொலிஸார் மற்றும் கிராம மக்கள் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். 380 பேர் மீட்கபட்டனர். அவர்களில் 68 பேர காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் 4 பேரில் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. நிலச்சரிவில் சிக்கி 8 பேர் பலியாகியுள்ளனர் இதற்கிடையே 3 பேர் மண்ணில் புதையுண்டு உயிரிழந்தனர். மேலும் 108 பேரை காணவில்லை. அவர்களும் மண்ணில் புதைந்து பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# இறந்த உடலை வழங்க விலைபேசும் ஐ.எஸ்.ஐ.எஸ்.

சிரியாவில் தலைத் துண்டித்து கொல்லப்பட்ட அமெரிக்க பத்திரிகையாளரின் உடலை விற்க ஐ.எஸ்.ஐ.எஸ்.பேரம் பேசி வருகின்றனர்.



இதுகுறித்து தீவிரவாதிகள் கூறியதாவது,


1 மில்லியன் டொலர்கள் கொடுத்தால் மட்டுமே ஜேம்ஸின் உடலை தருவோம் என்றும், ஜேம்ஸை பரிசோதித்து பார்த்துவிட்டு அவரது உடலை பெற்றுக் கொள்ளுங்கள் என வீடியோ ஒன்றில் தெரிவித்திருந்தனர்.

ஜேம்ஸின் உடலை வாங்க விரும்பிய குடும்பத்தினரும் தீவிரவாதிகளிடம் பேரம் பேசியுள்ளனர். ஆனால் தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு இணங்க அமெரிக்க அரசு மறுத்துவிட்டது.

இதற்கிடையே ஜேம்ஸின் உடலை துருக்கியில் ஒருவரிடம் விற்கவும் தீவிரவாதிகள் பேச்சு வார்த்தை நடத்துவதாக கூறப்படுகிறது. மேலும் தங்களுக்கு தேவையான நிதியை திரட்ட தீவிரவாதிகள் பிணைக்கைதிகளை கடத்தி பணம் பறிக்க முயல்கின்றனர் என்றும், அதற்கு அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஒப்புக் கொள்ளாததால்தான் இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

# குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

## வழங்கினார் தவநாதன்



வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனின் பிராமண அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட நிதியிருந்து 10 இலட்சம் ரூபா பெறுமதியில் 26 பயனாகளுக்கு அவர்களின் முன்மொழிவுகளுக்கு அமைவாக வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 40 இலட்சம் ரூபா நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாவுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைத் தவிர எஞ்சிய தொகை பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், மக்கள் அமைப்புகள், ஆலயங்கள் என்பவற்றின் முன்னேற்றத்திற்காகவும், உட்கட்டுமான பணிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் வாழ்வாதார உதவிக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தங்களின் தொழில் நடவடிக்கைகள் மற்றும் தங்களின் முன்மொழிவுகளுக்கு அமைய உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அதனடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மின்சார இயந்திரம், தெளிகருவி, தச்சுத்தொழில் உபகரணங்கள் ,வெதுப்பக தொழில உபகரணங்கள், குளிர்சாதன பெட்டி, கணணி, கூடுகளுடன் கோழிக்குஞ்சுகள், கறவை மாடு, போன்ற வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், கண்டாவளை கால்நடை மருத்துவர் கஜரஞ்சன், ஆசிரியர் விஜயகேரம்,கிளிநொச்சி விவசாயத்திணைக்கள பாடபோதானாசிரியர் ஜெயராசா, தொழில் திணைக்கள உத்தியோகத்தர், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குடிநீர் விநியோகம் சீரின்மையால் வலைப்பாடு மக்கள் பாதிப்பு

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட வலைப்பாடு கிராமத்துக் கான குடிநீர் விநியோகம் சீரின்மையால் குடிநீர் பெறுவதில் தாம் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளதாக அப்பகுதி மக்களால் கவலை வெளியிப்பட்டுள்ளது.

வலைப்பாடு கிராமத்தில் மக்கள் குடியேற்றத்தின் பின்னர் மிகவும் உவர் நிலப்பரப்பாக உள்ளமையால் அங்கு குடியேறிய மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு பூநகரி பிரதேச சபையால் பௌசர் மூலம் குடிநீர்த் தாங்கிகளில் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த ஒரு வாரகாலமாக இக் கிராமத்தி லுள்ள சில நீர்த்தாங்கிகளில் பௌசர்கள் மூலம் நீர் நிரப்பப்படுவதில்லை.

இதனால் நாம் குடிநீர் பெறுவதில் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு பூநகரி பிரதேச சபையினர் தீர்வுகாணவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (36)

# ஆயுர்வேத வைத்தியசேவையை மேலும் அதிகரிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நவாலி ஆயுர்வேத வைத்திய் சேவையை மேலும் இருநாட்கள் அதிகரித்து தருமாறு அப்பகுதி பொது அமைப்புக்கள் வடமாகாண சுகாதார அமைச்சரை கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

தற்போது நவாலி ஹேம்லதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களில் மட்டுமே இலவச ஆயுர்வேத மருத்துவ சேவை இடம்பெறுகின்றது.

இதற்காக வடமாகாண சுதேச ஆயுர்வேத பணிப்பாளர் திருமதி டாக்டர் சி.துரைரட்ணம் இரு நாட்களை அனுமதித்து வழங்கியுள்ளத்ாக தெரியவருகிறது.

நவாலி கொர்த்துக் கட்டியில் இயங்கி வரும் இலவச ஆயுர்வேத மருத்துவ சேவையை மேலும் இரு நாட்கள் விஸ்தரித்து வழங்குவதுடன் அந்நிறுவன அபிவிருத்திக்கு மேலதிக வசதி வாய்ப்புகளை வழங்கி உதவுமாறு கோரியே நவாலி பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி வடமாகாண சுகாதார அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. (92)

## மனித..

கொண்டு வரவும், துஷ்பிரயோகங்கள், இன, மத ரீதியான மோதல், பால்நிலை அடிப்படையிலான பாகுபாடுகள், வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கையில் அனைத்து மட்டங்களிலும் உள்ள தண்டனையில் இருந்து தப்பிக் கொள்ளும் நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டியது மிக முக்கியமானது. அத்துடன், அரசியலமைப்பின் 18ஆவது திருத்தத்தை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்றும் அனைத்துலக மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

## மக்களை....

தன சிங்கப்பூர் பாணி அரசொன்றை இலங்கையில் அமைப்பதற்கும், வலுவான ஜனாதிபதி முறையை கொண்டிருக்கும் தனது விருப்பத்தை நிறைவேற்றவும் நிறைவேற்று அதிகார முறையை கொண்டுவந்தார்.

கடந்த காலங்களில் பல அரசியல் தலைவர்கள் இதனை தங்களது நன்மைக்காக பயன்படுத்தினர். இதில் சிலர் இதனை அளவுக்கதிமாக- சர்வாதிகார அளவிற்கு பயன்படுத்தினர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் தனித்தொரு நிலைப்பாட்டிற்கு பரந்துபட்ட மக்கள் ஆதரவை பெறக்கூடிய நம்பகத்தன்மை மிக்க வேட்பாளர் தேவைப்பட்டார், மைத்திரிப்பால மிகச்சரியாக அதற்கு பொருந்துகிறார்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது அதேவேளை மிகைப்படுத்தவும் முடியாது, ஒன்பது வருடங்களுக்கு பின்னரும் மக்களை தன்பக்கம் திருப்ப கூடிய சக்தி அவருக்கு உள்ளதா என பொறுத்திருந்து பார்க்கவேண்டும். என குறிப்பிட்டுள்ளார்.

## காணி...

விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இதன் போது, சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்கள் மற்றும அரச திறத்தவர்களின் பின்னுறுதிப்படுத்தலும். கடப்பாடுகளும் எனும் விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

இதன்போது, பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, காணி சுவீகரிப்பிற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்க முடியாதா? ஏன கலந்து கொண்டவர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மனித உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கையினை மனித உரிமைகள் ஆணையகம் எடுக்க முடியும். ஆனால், காணி சுவீகரிப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்றார்.

அடிப்படைச்சட்டத்தில் அரசாங்கத்திற்கு காணி சுவீகரிப்பதற்கான அதிகாரம் இருக்கின்றது. அரசுக்கு தேவைப்படும் பட்சத்தில், மக்களின் பெயரில் உள்ள காணிகளையும் அத்தியாவசிய தேவைக்காக சுவீகரிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அதனடிப்படையில், அரசாங்கம் காணிகளைச் சுவீகரிக்க முடியும்.

அதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து வரும் நிலையில், அரசிற்கு எதிராக மனித உரிமை மீறல் என நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்படுவதற்கு மட்டும் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. என்ன காரணத்திற்காக கைதுசெய்யப்படுகின்றார்கள் என்பதனை அறிந்து தீர்வினை பெற்றுக் கொடுக்கின்றது. இவ்வாறான விடயங்களை மட்டும் பார்ப்பது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வேலைகள் இல்லை. மொழி உரிமை மீறல்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றதாக அவர் கூறினார்.

இச்செயலமர்வில், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள், பெண்கள் அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (25)

## தமிழ்த்தேசிய...

துடன், 4 அமைச்சர்களையும் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெக்நாதன் ஆகியோர் கடுமையாக சாடியுள்ளனர்.

ஒரு வருட காலத்தில் செய்யப்பட்ட வேலைத் திட்டங்களை இராணுவ இரகசியம், போன்று மூடி மறைப்பது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை பத்திரிகைகள் மற்றும் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அத்துடன், வேலைத்திட்டங்களின் உண்மைத் தன்மைஉறுப்பினர்களுக்கும் மறைப்பது உறுப்பினர்களின் சிறப்பு உரிமை மீறப்படும் செயற்பாடு என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடமாகாண அமைச்சர்களின் வேலைத்திட்டங்களை மூடிய அறைக்குள் தீர்மானமாக நிறைவேற்றுவதும், ஆளும் கட்சி என்ற வகையில் பெயரளவில், இருப்பதும் மக்கள் எதிர்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஆகிய எங்களை தூக்கி வீசுவார்கள். மக்கள் மத்தியில் பல விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்ற இந்த நிலமையில், வெளிப்படையாக இருக்க வேண்டும். வேலைதிட்டங்கள் அவையிலும், மக்கள் மத்தியிலும் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு தான், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல வாராந்தம் பத்திரிகையாளர் சந்திப்பின் மூலம் தெரியப்படுத்தி வருகின்றார். அதே போன்று வடமாகாண சபை மற்றும் வடமாகாண அமைச்சர்களின் வேலைத் திட்டங்கள் பத்திரிகைகளில் வெளிவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதற்கு பதிலளித்த வடமாகாண முதலமைச்சர் சீ.வி விக்னேஸ்வரன் 2015 ஜனவரி மாதம் முதல் இவற்றை அமுல்படுத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வட்டாரங்கள் தகவல் தெரிவித்தனர்.

இதேவேளை ஜனாதிபதித்தேர்தலில் யாரை ஆதரிப்பதென தீர்மானம் எடுக்கும் விடயத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இரண்டாக பிளவுபட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்தது. (25)

## குடிநீருக்கு...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பாக நேற்றைய தினம்இடம்பெற்ற விசேட உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் பரிசோதனை செய்யப்பட்ட இடங்கள் தொடர்பில் வலி. தெற்கு (உடுவில்) மற்றும் வலி. வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலர்கள் உள்ளிட்ட துறைசார்ந்தோர் ஊடாக ஆராய்ந்து பாதிக்கப்பட்ட இடங்களைத் தெரிவு செய்தல்.

மக்களுக்கும், கால்நடைகளுக்குமான குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக நீர்த்தாங்கிகளை நிறுவுதல் அத்துடன் உடனடித் தேவைகளுக்கான தேவைப்பாடுகளை ‘பூர்த்தி செய்யும் வகையில் பிரதேச செயலர்கள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் சுற்று வட்டாரத்தில் மேலதிக பரிசோதனைகளை முன்னெடுத்தல்.

மக்களுக்கென விநியோகிக்கப்படும் குடிநீரின் மாதிரிகளை வாரந்தோறும் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரிகள் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அமைச்சர் இதன்போது துறைசார்ந்தோரிடம் வலியுறுத்தினார்.

அத்துடன் மக்களுக்கான குடிநீர், சமையல் உள்ளிட்ட ஏனைய தேவைகளுக்கான நீரின் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட அதே வேளை, கால்நடைகளுக்கான குடிநீர் மற்றும் தொற்று நோய் தாக்கங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிலையில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தை சூழவுள்ள கிணறுகளில் எண்ணெய் கலந்து மாசுபட்டிருப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடந்த 16.08.2014 அன்று விசேட கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டு இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அதன்பிரகாரம் இவ்விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கடந்த 04.09.2014 அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பாதிப்புக்குள்ளான பகுதியை குடிநீருக்கு பாதுகாப்பற்ற பகுதியாக பிரகடனப் படுத்துவதற்கு விசேட அவசர அமைச்சரவைப் பத்திரமொன்றை இம்மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரால் ஏற்பாடு செய்யப்பட்ட அவசரமானதும் அவசியமானதுமான நேற்றைய இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸவரன், வலி. தெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன், வலி. தெற்கு (உடுவில்), வலி. வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச செயலர்கள் ஆகியோருடன் கமநல சேவைகள் திணைக்களம், இடர்முகாமைத்துவம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, சுற்று சூழல் அதிகாரசபை, யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் அதிகாரசபை, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல்துறைசார்ந்தோரும் கலந்து கொண்டனர்.



# வன்முறைகளற்ற வகையில் தேர்தல்; பிரதான வேட்பாளர்கள் வாக்குறுதி

## ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகளற்ற வகையில் இடம்பெறுமென இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தொவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடந்து ஐந்து நாட்களுக்குப் பின்னர், பாப்பரசர் பிரான்சிசின் பயணம் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், ஆயர்கள் மாநாட்டில் இதுகுறித்து கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதால், பாப்பரசரின் இந்தப் பயணம் பிற்போடப்பட வேண்டும் என்று, கத்தோலிக்கத் திருச்சபையின் ஒரு பகுதியினர் கோரி வருகின்றனர்.

ஆனால், இரண்டு பிரதான வேட்பாளர்களும், வன்முறைகளுக்கு இடமளிக்கப்படாது என்று தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக ஆயர்கள் மாநா டில் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார் என்று கத்தோலிக்க வாரஇதழான மெசஞ்சர், தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

அவர்கள் இருவரும் கூறிய வாக்குறுதியின் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ஆயர்களால் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் சரி, யார் தோல்வியுற்றாலும் சரி, இருவரும், பாப்பரசரை விமான நிலையத்தில் வரவேற்க வேண்டும் என்று அவர்கள் வேட்பாளர்கள் இருவரிடமும் கேட்டுள்ளனர்.

தேர்தலில் தோல்வியுற்றால் என்ன நடக்கும் என்று ஜனாதிபதியிடம் ஆயர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், எந்தவித தயக்கமும் இன்றி, வெற்றி பெற்றவரிடம் பதவியை ஒப்படைப்பேன் என்று பதிலளித்தார் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

# தொடர் இலங்கை வசம்



(கொழும்பு)

இங்கிலாந்துக்கு எதிராக ஆறாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 90 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி ஏழு ஒருநாள் போட்டிகளில் விளையாடுகின்றது.

இதில் முன்னதாக இடம்பெற்ற ஐந்து போட்டிகளில் இலங்கை மூன்றிலும் இங்கிலாந்து இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ள நிலையில் 3-2 என இலங்கை முன்னிலையில் இருக்க, இரு அணிகளுக்கும் இடையிலான ஆறாவது ஒருநாள் போட்டி நேற்று பல்லேகல மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதனையடுத்து களமிறங்கிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மஹேல ஜெயவர்த்தன 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

எனினும் நிதானமாக ஆடிய டில்ஷான் 68 ஓட்டங்களுடன் வெளியேற, குமார் சங்கக்கார அதிரடியாக 112 ஓட்டங்களைக் குவித்தார்.

ஐம்பது ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்த இலங்கை 292 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து 293 என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து, 41.3 ஓவர்களிலேயே 202 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

அந்த அணி சார்பில் ஜோ ரூட் அதிகபட்சமாக 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் இலங்கை அணிசார்பில் சுரங்க லக்மால் 4 விக்கெட்டுக்களையும் சஜித்திர சேனாநாயக்க 3 விக்கெட்டுக்களையும் டில்ஷான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

இதன்படி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 4-2 என இலங்கை வசமாகியுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி ஒருநாள் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# புலிகளின் ஆதரவாளருக்கு பிரிட்டனில் 3 வருட சிறை



தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு இயக்கமான ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி அல்லது ஈ.என்.டீ.எல்.எப். அமைப்பின் சர்வதேச பணிப்பாளரான வீ. ராமராஜ் என்பவருக்கு பிரித்தானிய நீதிமன்றம் 3 வருட சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

ஐந்து மில்லியன் தங்க வரி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இத்தண்டனை இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. லண்டனில் வெளிநாடு ஒன்றின் தூதுவர் காரியாலய அதிகாரி எனத் தெரிவித்து இவர் இந்த வரி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

இவர் போதைவஸ்து கடத்தலில் சம்பந்தப்பட்டதால் குடு முஸ்தபா என்று பரவாக உலகெங்கும் நன்கு அறியப்பட்டவர்.

## மத்திய கிழக்கிற்கு சென்ற 85 பேர் நாடு திரும்பினர்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்காக சென்ற இலங்கையர் குழுவொன்று மீண்டும் நாடுதிரும்பியுள்ளது.

நேற்றுக் காலை 85 தொழிலாளர்கள் இவ்வாறு நாடுதிரும்பியுள்ளனர்.

பல்வேறு காரணங்களுக்காக வேலையைப் புறக்கணித்த குழுவினரையே நாட்டுக்கு அழைத்து வந்துள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி கட்டாரில் பணிபுரியச் சென்ற 37 ஆண்கள் சவுதி மற்றும் குவைத்தில் பணிபுரிந்து வந்த 48 பேருமே இவ்வாறு நாட்டுக்கு வந்துள்ளனர்.

# 810 போலி இணையத்தளங்கள் மூன்று வாரத்தில் கண்டுபிடிப்பு

கடந்த மூன்று வாரங்களில் 810 போலி இணையத்தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் தொழில் நுட்ப முகவர் நிறுவனம் தெரிவிக்கின்றது.

அடையாளம் காணப்பட்டுள்ள போலி இணையத்தளங்கள் அனைத்தும் வெளிநாடுகளிலிருந்து செயற்படுத்தப்படுவதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் அதுல புஷ்பகுமார குறிப்பிட்டார்.

போலியான தகவல்களை வெளியிடுதல் மற்றும் அரசியல் வாதிகளுக்கு அவதூறு ஏற்படுத்தல் இந்த போலி இணையத்தளங்களின் நோக்கமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நான்காயிரத்துக்கும் அதிகமான போலி பேஸ்புக் கணக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் அதுல புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

ஆட்களுக்கு அவதூறு ஏற்படுத்துவதே இந்த போலி பேஸ்புக் கணக்குகள் இயக்கப்படுவதன் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது என அதுல புஷ்பகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலப்பகுதியில் சுமார் 500 போலி பேஸ்புக் கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும குறிப்பிட்டுள்ளார்.

# கடலாமைகளுடன் இருவர் சிக்கினர்



யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியைச் சேர்ந்த இருவர், மூன்று கடலாமைகளுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடலாமைகளை இறைச்சியாக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால், இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடலாமைகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தேக நபர்களை சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(25)

## 10 விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

புதிதாக 10 விமானங்களை கொள்வனவு செய்வதற்கு சிவில் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானங்கள் பிரிவிற்கு வலுச்சேர்க்கும் நோக்கிலேயே இந்த விமானங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் டொக்டர் ரவீந்திர ருபேரு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கென தற்போது 23 விமானங்கள் காணப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# பணத்தை பெற்றுக்கொண்டே பேருந்துகளை அனுப்பினேன்

## அமைச்சர் குமாரவெல்கம தெரிவிப்பு



(கொழும்பு)

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் முதலாவது பிரசாரக் கூட்டத்துக்கு நான் பஸ்களை அனுப்பினேன். ஆனால் பணத்தைப் பெற்றுக்கொண்டே அனுப்பினேன் என போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்ஹகம தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்

தமிழ்க்கூட்டமைப்பின் சம்பந்தன் கேட்டாலும் பஸ் வண்டிகளை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம், ஆனால் அதற்கான கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

நான் பஸ்களை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்துள்ளேன். எனவே பணத்துக்கு பஸ்களை வழங்குவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியிலிருந்து இலங்கை போக்குவரத்து அதிகார சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகள் மூலம் ஆதரவாளர்கள் திரட்டப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளியல் வினாவிசாரணை; புத்திஜீவிகள்குழு நியமனம்

(கொழும்பு)

2014 கல்விப் பொதுத்தராதர உயர்தர பொருளியல் வினாப் பத்திரம் குறித்து விசாரணை செய்வதற்காக, புத்திஜீவிகள் குழுவொன்றை பெயரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூன்று பேராசிரியர்களும், முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் ஒருவரும் குழுவிற்கு பெயரிடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

2014 உயர்தர பொருளியல் வினாத்தாள் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ள தரப்பினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த தீர்மானத்தை எடுத்ததாக மனித உரிமைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.